// தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் உச	திருவள்ளுவர் ஆண்டு கசஎக சருவதாரி—புரட்டாசி, ஐப்பசி 1948—செப்டம்பர், அக்டோபர்	மலர் சா, எ

பொழிற்றொண்டர் கருத்துரைகள்.

இந்தியை எதிர்ப்பது முறையா?

இந்தியை எதிர்ப்பது முறையா? என்னும் பொருள் பற்றி, முறையென்பார் கட்சியையும், அன்றென்பார் கட்சியையும் முன் மலர்களில் எடுத்துக் கூறி, இதன்மேல் எம் கருத்தைப் பின்னர்க் கூறுவோம் என்றும் எழுதினோம். அங்ஙனமே நம் கருத்தை அடுத்த மலரில் வெளியிடுவோம்.

இராகம்—அம்சத்தொனி
தாள அங்கம் | 4, O, O
தாளம்—ஆதி

இசைத் தமிழ்ப் பாடல்

சங்கீதம் ப. சுந்தரேசன், கும்பகோணம்.

திருநாரையூர் பொல்லாப் பிள்ளையார் துதி.

29வது மேளத்திற் பிறந்தது.
ஆ.—ச ரி க ப நி ச்
அ.—ச் நி ப க ரி ச

முதனிலை.

1.	; கா ; ரீ கா ரீ சா ;	; ச ரீ க ரீ	ரீ ரீ ரீ கரிரீ ; ‖
	; ஆ ; னை மு க வன் ;	; அ டி மலர்	த னை யே , , , , ‖
2.	; கா ; ரீ ச ரி க ரி க ரி சா	; ச ரீ க ரீ	ரி க ரீ ரீ க ரி ரீ ; ‖
	; ஆ ; னை மு , , , க , வன்	; அ டி மலர்	த . னை யே , , , , ‖
3.	; கா ; ரீ ச ரி க ப க ரி சா	; ச ரீ க ரீ	க ப கா ரி ச ச் நி ‖
	; ஆ ; னை மு , , , க , வன்	; அ டி மலர்	த . னை யே , , , ‖
4.	ச ரி கா ; ரீ ச ரி க ப க ரி சா	; ச ரீ க பா	க ப கா ரி ச ச் நி ‖
	, , ஆ ; னை மு , , , க , வன்	; அ டி ம லர்	த , னை யே , , , ‖
5.	ச ரி கா ; ரீ ச ரி க ப க ரி சா	; ச ரீ க பா	ப நி ச் நி ப க ரி ச ‖
	, , ஆ ; னை மு , , , க . வன்	; அ டி ம லர்	த . னை , யே , , , ‖
1.	ச ரி க பா க ரீ ச ரி கா ரி க பா	பா ; ச்சா ;	ச் ரி ச் நி ப கா ரி ‖
	, , அனு தினம் நி , , னை , ,	வாய் ; நெஞ் ;	சே , , , , , , ‖
2.	ச ரி க பா க ரீ ச ரி கா ரி க பா	பா ; ச் ரி ச் நி	ச் ரி ச நி ப கா ரி ‖
	, , அ னு தி னம் நி , , னை , ,	வாய் நெஞ் , , ,	சே , , , , , , ‖

ச ரி
, , = ஆனைமுகவன் ,,

துணைநிலை.

1. ; பா கா பா நீ நீ ச்ா ச்ா | ; நீ ச்ா ரீ | ; ச ரி ச் நி பா ||
; ஆ னைந் தும் ஆ , டி டும் | ; அண்ணலார் | ; ம , லி , ழும் ||

2. ; பா கா பா நீ நீ ச்ா ச்ா | ; நி ச ரி க் ரீ | ; ச் ரி ச் நி பா ||
; ஆ னைந் தும் ஆ , டி டும் | ; அண்ண, லார் | ; ம , லி , ழும் ||

3. ; பா கா பா நீ நீ ச்ா ச்ா | ; ப நி ச் ரி க்ா | ரீ ச் ரி ச் நி பா ||
; ஆ னைந் தும் ஆ , டி டும் | ; அ ண் ண , , | லார் ம , லி , ழும். ||

1. ; பா ரீ கப பா நிச் ரீ ரீ | ; ச நி க் ரி ச்ா | ச் ரி ச் நி பா க ரி ||
; ஐங் க ரனே , யென் , றும் | ; ஐ , யை , ம | க , னே யென் றும் , ||

2. ச ரி பா ரீ ச ரி க ப நிச் ரீ ரீ | ; ப நி க் ரி சா | ச் ரி ச் ப நி ப க ரி ||
, , ஐங் க ர , னே , யென் , , றும் | ; ஐ , யை , ம | க , , னே , , யென் , ||

ச ரி
றும் , = ஆனைமுகவன்

(திருப்புக)

கடைநிலை.

	பா ; கா ; ப க க ரி சா ச ரி	ச ஙி ச ரீ க ரீ	கா பா பா பா	‖
	பொல் , லா , பி ள் ளை , யா ரெ ,	ன , பொதுப் பெய	ரும் எ டு த்தார்	‖
	; ப நீ ச் நீ ச் நி பா க ரி சா	ரி க ப க ரி ச ரீ	கா பா பா ;	‖
	பு ண் ணி ய நா , ளை யூ , ரில்	பு க ழ்பெ , ற , வே	ய டுத் தார் ;	‖
1.	; பா கா பா நீ நீ ச்ா ச்ா	; நீ ச்ா ரீ	ச் ரி ச் நி பா பா	‖
	நல் , லார் நம்பி யாண் டார்	; நம் பிக் க	ருள் கொ , டுத் தார்	‖
2.	; பா கா பா நீ நீ ச்ா ச்ா	; ப நி ச் ரி க் ரி	ச் நிக் ரி ச் நி பா	‖
	நல் , லார் நம்பி யாண் டார்	; ந ம் பி , க ,	ருள் , கொ , டு த் தார்	‖
	; ச் நி க் ரி ச்ா ச் ரி ச் நி பா க ப	நீ ச் ச்ா நி பா	கா க ப க க ரி ரி	‖
	நா . ணி . லம் ம , ஙி , மூத் த மி	ழ் ம றை க ளை	யும் வி , டு , த்தா ,	‖

ச ரி
, , ர் = ஆனைமுகவன்

பண் குறிப்பு

இத்தப் பண் அரும்பாலை யெனும், தீரசங்கராபரணத்திற் பிறந்தது ; ஐந்திசைப் பண், ஏற்றவிசை ச ரி க ப நி = இறக்கவிசை ச் நி ப க ரி = க. விசையும், நீ. யிசையும் அசை விசைகள். மிகவும் இனிமையான சுவைதரும் பண்.

இசையமைப்பின் குறிப்பு

ஆதி தாளம்.—இதற்கு எட்டு எண்ணுகும். ஒவ்வோ ரெண்ணுக்கும் நான்கு நான்கு முடுகிய (தனதன) சொற் கொண்டே இசைப்படுத்தப்பட்டுள்ளது. ஆதி தாளத்தை சதுரச்ர திருபுடை யெனவும் கூறுவர்.

இசைக் குறிப்பு

——— இக் குறி மத்திம காலத்தைக் குறிக்கும். ——— இக் குறி அசைவைக் குறிக்கும்.

ஒரிசைக்கு மேற்புள்ளியிருந்தால் வலிவுத் தானம், கீழ்ப் புள்ளியிருந்தால் மெலிவுத் தானம், புள்ளி யில்லாதது சமன் தானம்.

திருக்குறள்
பொன்னுரைப் பகுதிகள்.

உரைகாரர்: கொக்குவில் திரு. வ. பொன்னையா, B.A. (Hons.), Ph.D.

(முற்றொடர்ச்சி: துணர் உச, மலர் ரு, பக்கம் 156.)

(1) நல்லாற்ரு ணுடி யருளாள்க பல்லாற்ருற்
றேரினு மஃதே துணை.

(இ-ள்.) நல்ல நாடி ஆற்ருன் அருள் ஆள்க—சாதனங்கள் பலவற்றுள்ளும் அரு ளுடைமைக்குத் துணை செய்வன இவை யென்று காண்டல், கருதல், உரை யென்னும் அளவைகளான் ஆராய்ந்து கண்டு அந் நெறிகளில் நின்று அரு ளுடைமையை ஆள்க; பல்லாற்ருல் தேரினும் அஃதே துணை—ஒன்றனுக் கொன்று முரணுகிய சமய நெறிகள் பலவற்ருனும் ஆராய்ந்தாலும் இம்மை மறுமைகளுக்குத் துணையாவது அவ் வரு ளுடைமையே ஆகலான் எ-று.

அருளுடைமைக்குத் துணை செய்யும் அறங்க ளாவன, புலா லுண்ணுமை முதலியன. ஆற்ருன் என்பதில் மூன்ற னுருபு ஏழாவதன் பொருட்கண் வந்தது. நல்ல நாடி (அவ்) ஆற்ருன் என்று மாறிக் கூட்டுக. அருள் என்பது அரு ளுடைமை யென்னும் பொருள்தந்து நிற்றல்பற்றி ஆகுபெய ரெனக் கொள்க. அது ஆகுபெய ராதல், 'முதலிற் கூறுஞ் சினையறி கிளவியும்' என்றற் ருெடக்கத்துச் சூத்திரத்து, 'அனைய மரபின' என்புதா லென்க. ஏகாரம் தேற்றம். நாடுதல் என்பது காண்டல், கருதல், உரை யென்னும் அளவைகளான் ஆராய்தல். சுருதி, யுக்தி, அனுபவங்களான் ஆராய்தல் என்று பொருள் கூறினு மமையும். அரு ளுடைமை யாகிய செல்வம் நினையுங்காற் ருேன்றியும் நினையாக்கால் மறைந்தும் நிற்ப தொன் ருகலான், அதனை

யாள்க வென்பது, அது செறிந்து நிற்குமாறு அதனை இடைவிடாது நினைக்க என்றவாறு.

அன்றி, அருளாள்க என்பதற்கு அருட் டன்மையை ஆள்க என்று பொருள் கூறினாற் படும் இழுக்கென்னையோ வெனின் கூறுதும். தன் னில முழுவதும் ஆளும் வேந்தன் தனது ஆட்சியிற் கருத் தின் றிய போதினும், அதனை யாள்கின்ரு னென்று கூறுதல் போன்று, நிலைபே றுடைய தும் நுகர்ந்தே யின்பம் பயப்பதற் கேதுவு மாய அருட் டன்மையை விரவிய மக்கள் அத் தன்மையிற் றங் கருத்தைச் செலுத்தாக்காலும் அதனை யாள்கின்ரு ரென்று கூறுதல் பொருந்து மென்பது பற்றி, அருட் டன்மையை ஆளுத லென்பது இடையிடையே கருத் தின்றிய போக் குள்ள தென்பதும், அக் கருத் தின்றிய காலங்களி லெல்லாம் பாவஞ் செய்து கோடல் கூடு மென்பதுந் தோன்றக் கிடத்தலால் அவ்வாறு பொருள் கொள்ளற்க வென்றவாறு.

இனி, அரு ளுடைமை யாகிய செல்வத்தை யாளுதற் கண்ணும் பாவஞ் செய்துகொள்ளும் அமயங்கள் வாராவோ வெனின், வாரா வென்க. நினையுங் கணத்திற் ருேன்றி நினையாக் கணத்தில் மறையும் இயல்பிற் ருகிய அரு ளுடைமை யாகிய செல்வத்திற் கருத் தின்றியபோது அச் செல்வம் இல்லாத காரணத்தானே அதனை யாளுதல் ஏலாமையானும், இடைவிடாது நினையும்போதே அது தோன்றி நிற்கு மாகலான், அப்பொழுதே அதனை யாளுதல் முடியு மாகலானும், அச் செல்வத்தை யாளுதல் என்பது இடையீடு படாத நினைவிற் றென்பதும், அவ் விடையீடு படாத காரணத்தானே பாவஞ் செய்துகோடற் குரிய வமயங்க ளின்றிய தென்பதுங் காண்க.

சைவ சித்தாந்திகள், சாங்கியரோ டுடம்பட்டுக், காண்டல், கருதல், உரை யென்னும் மூன் றளவைகளையே கொள்வர், நையாயிகர் ஒப்புப்பற்றி யுணரும் உவமை

யுளப்பட அளவைகள் நாலென்பர். ஆருகதரும், பிரபாகரரும், இங்ஙன மாதலின் இது கூடாது என்னும் அருத்தாபத்தியையுஞ் சேர்த்து, அளவைகள் ஐந்தென்பர். வேதாந்திகளும், பாட்டரும், இன்மைபற்றி யுணரும் அபாவத்தையும் ஒரு தனி யளவையாகக் கொண்டு, அளவைகள் ஆறென்பர். இவை யெல்லாம் சித்தாந்திகள் கொள்ளுங் காண்டல், கருதல், உரை யென்னும் மூன் றளவைகளிலும் அடங்குமென்பது கருத்து. சமயங்கள் ஒன்றனுக் கொன்று முரணுத லென்பது அளவைகளானும் பொருள்களானுந் தம்முள் ஒவ்வாமை.

இக் குறளுக்குப் பரிமேலழகர், 'அளவைகளானும் பொருந்து மாற்ருனும் நன்ருன நெறியிலே நின்று, நமக்குத் துணையாம் அறம் யாதென் ருராய்ந்து அரு ளுடைய ராக; ஒன்றை யொன் ருெவ்வாத சமய நெறிக ளெல்லாவற்ருனும் ஆராய்ந்தாலும் துணை யாவது அவ் வருளே; பிறி தில்லை.' என்னும் உரையைத் தந்து, இதனுல் அருளினது சிறப்புக் கூறப்பட்ட தென்ருர்.

நன்ருன நெறி இன்ன தென்று கூருமையானும், நமக்குத் துணையாம் அறம் யா தென் ருராயின், தவ முதலியனவுந் துணையாதல் பற்றி அது அரு ளுடைமையே யென்பது பெறப்படாமையானும், சமய நெறிக ளெல்லாவற்ருனு மாராய்ந்தாலுந் துணையாவது அவ் வருளே, பிறிதில்லை யென்பது வாய்மை முதலியனவுந் துணை செய்யு மென்று சமய நெறிக ளெல்லாங் கழறுதலை மறுக்கின்றமையானும், இனி 'அருளாள்க' என்று ஆசிரியர் கூறியமை பற்றி இத் துணைச் சிறப்புப் பொருந்திய அரு ளுடைமையை யாள்க என்று கூறுத லொழிந்து, இதனுல் அருளினது சிறப்புக் கூறப்பட்ட தென்பது குன்றக் கூற லாகலானும், அழகியா ருரையைப் போலி யுரை யென்க.

இப் பாட்டு என் னுதலிற்ருே வெனின், சமய நெறிகள் பலவும் இம்மை மறுமைகளுக்குத் துணை செய்வது அரு

ளுடைமையே; இதன்கண் ஐயம் இன்று என்று கூறுதற் கண் ஒக்கும்; ஆகலான் அருளாள்க எ-து.

(2) அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணு முள.

(இ-ள்.) அருட் செல்வம் செல்வத்துள் செல்வம்-அருளுடைமை யாகிய செல்வம், செல்வங்கள் பலவற்றுள்ளும் மேம்பட்ட செல்வம்; பொருட் செல்வம் பூரியார் கண்ணும் உள—அஃ தொழிந்த பொருளுடைமை யாகிய செல்வம் இழிந்தார் மாட்டும் உள, ஆகலான் அருளாள்க. எ-று.

ஈண்டு அருள், பொருள் என்பன ஆகு பெயராய் அருளுடைமை, பொருளுடைமைகளைக் குறித்து நின்றன. அருட் செல்வம், பொருட் செல்வம் என்பன இரு பெயரொட்டுப் பண்புத் தொகை. அவை அருளுடைமை யாகிய செல்வம், பொருளுடைமை யாகிய செல்வம் என விரியும், உம்மை இறந்தது தழீஇய வெச்ச வும்மை. அருளாள்க வென்பது முன் வெண்பாவினின்றும் பெறப்பட்டது.

பொருட் செல்வம் பூரியார்கண்ணு முள என்றமையால், அருட் செல்வம், அவ் வகை யின்றிப், பூரியார்கண் இல வென்பது பெறப்படும். இழிந்தார் மாட்டுப் படும் பொருட் செல்வம் அவரைக் கெடுக்கினுங் கெடுத்துத் தானுங் கெடினுங் கெடும். அருட் செல்வமோ வெனின், அவர் மாட்டுப் படாத காரணத்தானே அவரையுங் கெடுக்காது; தானுங் கெடாது. இத் தன்மையே இதுவாக அருட் செல்வஞ் செல்வத்துட் செல்வ மென்று ரென்க.

இஃ தறியாதார், பரிமேலழகியார் உயர்ந்தார் கண்ணே யல்ல தில்லாத அருட் செல்வமே சிறப்புடைய செல்வம், ஏனை நீசர்கண்ணு முளவாம் பொருட் செல்வங்கள் சிறப்பில தென்பதா மென்றனர். இவர் கருத்து பொருட் செல்வங்கள் உயர்ந்தார், இழிந்தார் என்னும் இரு வகையினர்

மாட்டும் உளவாக, அருட் செல்வம் உயர்ந்தார்கண் மாத்திரம் உளவாதல் பற்றிச் சிறந்தது என்பது. இஃது உரையன்மை அறிக.

இப்பாட்டு என்னுதவிற்றோ வெனின், அருளுடைமையானது செல்வங்கள் எல்லாவற்றுள்ளுந் தலையாய செல்வமாகலான் அதனை யாள்க. எ-து.

(3) அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை யிருள்சேர்ந்த
இன்னா வுலகம் புகல்.

(இ-ள்.) இருள் சேர்ந்த இன்னா உலகம் புகல்—மறுமைக்கண் இருள் திணிந்த துன்ப உலகத்துட் புகுதல்; அருள் சேர்ந்த நெஞ்சினார்க்கு இல்லை—இம்மைக்கண் அருளுடைமை செறிந்த நெஞ்சினை யுடையவர்க்கு இல்லை; ஆகலான் அருளாள்க. எ-று.

அருள், ஆகுபெயர். சேர்ந்த என்பது இரண்டிடத்தும் இலக்கணையால் செறிந்த என்னும் பொருள் தந்து நின்றது. சேர்ந்த நெஞ்சினார், சேர்ந்த உலகம் என்பனவற்றில் செய்த வென்னும் பெயரெச்சத் திறுதி யகரம் தகர வூர்ந்து நிலப் பொருட் குரித்தாய் வந்தது. நெஞ்சினார், உடைப் பெயர். நான்கனுருபு உபகாரப் பொருளது. சேர்ந்த இன்னா வுலகம் என்பதில் பெயரெச்சங்கள் ஒரு வாய்பாட்டால் அடுக்கி நின்றன. இன்னாத வென்னும் பெயரெச்சங் கடைக் குறைந்து இன்னா என நின்றது. இன்னா வுலகம் எனப் பெயரெச்சத்தி னெதிர்மறை கருவிப் பெயர் கொண்டு நின்றது. உலகமென்பதன் பின் ஏழனுருபை விரிக்க. புகல், வினைப்பெயர்.

இருள் சேர்ந்த இன்னா வுலக மென்றது திணிந்த இருளை யுடைத்தாய்த் தன்கட் புக்கார்க்குத் துன்பஞ் செய்யும் நரகத்தை. அதுதான் நரகமும், மா நரகமும், இராச நரகமும், இராச ராசேச்சுர நரகமும் என நான்கு வகைப்

படுமென்றும், இவை யொவ்வொன்றும் எட்டெட்டு வுட்பிரிவைக் கொண்டு நிற்றல்பற்றி முப்பத்திரண்டு வகைப் படு மென்றுங் கொள்ளப்படும்.

மக்கட் பிறவியை யெடுத்த உயிரானது ஐம் பெரும் பூதங்களின் காரிய மாகிய தன் தூல வுடம்பின் நீங்கியவழி, தான் செய்துகொண்ட வினைகளின் வன்மை மென்மை களுக்கேற்பப் பின்னு மோர் கருவில் விழுந்து நிலத்திடைப் பிறக்கினும் பிறக்கு மென்பதும், இந் நிலத்தின்கண் துய்க்க வொண்ணுத நல்வினை பக்குவப்படின் சூக்கும பூதங்க ளாகிய தன் மாத்திரை ஐந்தும், மனம், புத்தி, அகங்கார மென்னும் அந்தக் கரணங்கள் மூன்று மாகிய எட்டானு மாய சூக்கும தேகத்தோடும் துறக்கத்திற் சென்று, பூத சார வுடம் பெடுத்து, ஆண் டுள்ள இன்பம் நுகர்ந்து தொலைந்த பின் எஞ்சி நின்ற வினைச் சேடத்தான் அவ் வுடம்பை விட்டுச் சூக்கும தேகத்தோடு மேக மண்டலத் தினை யடைந்து, ஆண் டுள்ள மழைத் தாரையுடன் கூடி, நிலத்தினை யடைந்து, நெல் முதலிய உணவுப் பொருள்களு டன் விரவி நின்று, தந்தை வயிற்றுட் புக்குச் சுக்கிலமாய்ப் பரிணமித்து, அதனேடு சேர்ந்து தாய் வயிற்றுட் சென்று கருவாய்ப் பரிணமித்துத், தூல தேகத்தோடு நிலத்திற் ருேன்று மென்பதும், இந் நிலத்தின்கண் அநுபவித் தொழிக்கப் படாத தீவினை பக்குவப்படின், துறக்கம், மேக மண்டலம், நிலம், தந்தை, தாய் என்னும் ஐந்து நிலைக்களத்தும் வைகுதல் என்ற நியம மின்றிச், சூக்கும தேகத்தோடு கற்பாறை மீது பாடாணம் போற் கிடந்து, கடவதாங் காலங் கழித்துத், தன் வினைக் கேற்ற நரகத்திற் சென்று, யாதனு சரீர மெடுத்து, ஆண் டுள்ள துன்பந் துய்த்துத் தொலைந்த வழி எஞ்சி நின்ற வினைச் சேடத்தால் அவ் வுடம்பு நீங்கித் தன் வினைச் சேடத்திற்குத் தக்க தொரு தேகத்தை யெடுக்கு மென்பதும், தத்துவ நூற் கொள்கைக ளாகும். இவற்றுள் அருளாட்சி நரகம் புகுதலை

நீக்கு மெனவே, அரு ளாள்வானுக்கு ஏனைய இரண்டும் அவன் பக்குவத்திற்குத் தக வாகு மென்பது காண்க.

இக் குறளுக்குப் பரிமேலழகர், அருள் செறிந்த நெஞ்சினை யுடையார்க்கு நரகம் புகுத லில்லை யென்பது பட உரை கூறினர். அரு ளுடைமை யாகிய சாதனஞ் செய்வா னொருவன் தனது உடைமைத் தன்மையை நினைந்து நினைந்து இன்புறுதற் கேது வாகிய பற்றுள்ள மென்னுஞ் செல்வத்தை நினைக்க நினைக்க அச் செல்வஞ் செறிப்பது பற்றி இவனே இம்மையிற் சாதனஞ் செய்பவ னென்றும், இவனுக்கே மறுமைக்கண் நரகம் விலக்கப்படு மென்றுங் கூறுத லொழிந்து, அருள் செறிந்த நெஞ்சினை யுடையார்க்கு நரகம் புகுத லில்லை யென்று கூறுதல், முற் பிறப்பிற் செய் துள்ள சாதனங் காரணமாக அருட் செறிவினை யுடையா னொருவன் இம்மையிற் சாதனஞ் செய்யாது பாவஞ் செய்து மறுமைக்கண் நரகம் புகினும் புகுவன் என்பதால் மறுக்கப்படு மாகலான், அழகியா ருரை உரை யன்மை யறிக.

இப் பாட்டு என் னுதவிற்றோ வெனின், அரு ளுடைமை யாகிய செல்வம் நரகம் புகுதலை நீக்கு மாகலான், அதனை யாள்க. எ-று.

(4) மன்னுயி ரோம்பி யருளாள்வாற் கில்லென்ப
தன்னுயி ரஞ்சும் வினை.

(இ-ள்.) மன்னுயிர் ஓம்பி அரு ளாள்வாற்கு—நிலை பெற்ற உயிர்களைப் பேணி அப் பேணுதலே ஏதுவாக அருளுடைமை யாகிய செல்வத்தை ஆள்வானுக்கு; தன் னுயிர் அஞ்சும் வினை இல் என்ப—தன்னுயிர் அஞ்சுதக வரும் வினைகள் உளவாகா என்று கூறுவர் அறிந்தோர்; ஆகலான் அரு ளாள்க. எ-று.

மன்னுயிர்-வினைத்தொகை. ஓம்பி-காரணப் பொருளில் நின்ற செய் தெ னெச்சத் திரிபு. நான்க னுருபு உபகாரப்

பொருளது. என்ப வென்பது எதிர் காலத்தைக் குறிக்கும் ப என்னும் விகுதியான் முடிந்த பலரறி சொல். அறிந்தோர்- சொல்லெச்சம். தன்னுயிர் என்பது பிறிதின்கிழமைப் பொருள் தாராது, தலை மாத்திரையாய் நிற்கும் இராகுவை இராகுவினது தலை யென்று கூறும் வழக்குப் போன்று, ஒற்றுமைக் கிழமைப் பொருளில் நின்ற ஆறும் வேற்றுமைத் தொகை. அஞ்சும் வினை யெனச் செய்யு மென்னும் பெய ரெச்சத்து உம் மீறு கால வெழுத்துப் பெறுது அஞ்சுதற்கு ஏது வாகும் வினை யென்னும் ஏதுப் பொருண்மையில் நின்றது. மன்னுயி ரோம்பி யரு ளாள்வாற்குத் தன்னுயி ரஞ்சும் வினை யில்லை யென்றல் முக் காலத்தினு மொத் தியல்வ தாகலின், 'முந் நிலைக் காலமுந் தோன்று மியற்கை' என்னுஞ் சூத்திர விதிபற்றி அதனை இல்லென்ப வென்னுது நிகழ்காலப் பொதுச் சொல்லாற் கூறல் வேண்டும். அன்றித் தொல்லாசிரியர் துணிந்த தொன் றென்று இறந்த காலத் காலத்தாற் கூறினு மமையும். அவ்வா றன்றி என்ப வென எதிர் காலத்தாற் கூறியமை முக் காலத்தினு மொத்தியல் பொருளை எதிர் காலத்தாற் கூறுதல் தமிழ் நடை யென்று அறிவுறுத்தற்கே யென்க. இதனைத் தொல்காப்பியனுர் 'எழுத்தெனப் படுப வகர முத னகர விறுவாய் முப்பஃ தென்ப' என்ருற் போலுஞ் சூத்திரங்களில் உடம்பொடு புணர்த்த லென்னும் உத்தியாற் காட்டி வைத்தா ரென்று சிவஞான முனிவர் கூறும் தொல்காப்பிய முதற் சூத்திர விருத்தி யுரையானே யறிக.

துறவை மேற்கொண்டு நின்று, மன்னுயிர்ப் பேணி, அப் பேணுதலே ஏதுவாக அருளுடைமை யாகிய சாதனத் தைச் செய்து, அதனை யாள்வா னுவான் செய்யும் வினைக ளெல்லாம், அவ னுயிர் அஞ்சுதக வரும் பிறவிகளைக் கொடுக்கும் பசு நல்வினை தீவினைக ளாகாது, சிவ புண்ணியங்க ளாகி, ஞானுசிரியனை அவன் எய்தும் வண்ணஞ் செய்து, அவர் கொடுக்குந் தவத்தினி லவனைச் செலுத்தி,

ஞான வாயிலாக வீடுபே றடைவிக்கு மென்று கூறியவா ருயிற்று.

இக் குறளுக்குப் பரிமேலழகர், 'நிலைபே றுடைய உயிர்களைப் பேணி அவற்றின்கண் அருளுடைய னுவானுக்குத் தன் னுயிர் அஞ்சுதற் கேது வாய தீவினைகள் உளவாகா வென்று சொல்லுவர் அறிந்தோர்' என்னும் உரையையும், 'அன்ன வறத்தினேன் கொலை முதலிய பாவங்கள் செய்யா னெனவே மறுமைக்கண் நரகம் புகாமைக் கேது கூறியவா ருயிற்று.' என்னும் உரை விளக்கத்தையுந் தந்தார்.

மன்னுயிர்ப் பேணி அருளுடைமை யாகிய செல்வத் தை ஆள்பவனுக்கே யன்றி, அவற்றைப் பேணி அரு ளுடைய னுவானுக்கு அருளுடைமைத் தன்மை இடையீடு படாதென்பது இல்லை யாதலின், அவ் வரு ளுடைய னுவான் அத்தன்மை இடையீடு பட்ட காலங்களி லெல்லாம் பாவஞ் செய்துகொண்டு மறுமைக்கண் நரகம் புகுதலை யாக்கிக் கோடல் கூடு மாகலானும், இனி ஆசிரியர் அன்ன அறத்தி னேற்கு நரகம் புகுத்தும் வினை இல்லை யென்பது கூறுவா னெடுத்துக் கொண்டா ரெனின், ஒரே வெண்பாவான் அது கூறுத லொழிந்து, ஒரு வெண்பாவான் அன்னவனுக்கு நரகம் புகுதல் இல்லை யென்றும், வேருெரு வெண்பாவான் அது புகாமைக் கேது கூறுமுகத்தானே தீவினை யில்லை யென்றுங் கூரு ராகலானும், அழகியா ருரை உரை யன்மை யறிக.

இப் பாட்டு என் னுதலிற் ருே வெனின், அரு ளாள்வான் செய்யும் வினைகள் பிறவிகளைக் கொடுக்கும் பசு நல்வினை தீவினைக ளாகாது, சிவ புண்ணிய மாகி வீடு பே றுதவும், ஆகலான் அரு ளாள்க. எ-து.

(5) அல்ல லருளாள் வார்க் கில்லை வளிவழங்கு
மல்லன்மா ஞாலங் கரி.

(இ-ள்.) அருளாள்வார்க்கு அல்லல் இல்லை—அருளுடைமை யாகிய செல்வத்தை ஆள்வார்க்கு அவ்வுடைமையே ஏதுவாக இம்மைக்கண்ணும் ஒரு துன்பமும் உண்டாகாது; வளி வழங்கும் அல்லல் மா ஞாலம் கரி—அதற்கு ஏனையோர் இறக்கு ஞான்று அவர்க் குளதாம் பிராணவாயு மேற்படுத லாகிய துன்பம் இப் பெரிய ஞாலத்துக்கண் சான் ருகும், ஆகலான் அருளாள்க. எ-று.

அருள்-ஆகுபெயர். ஆள்வார்-வினையாலணையும் பெயர். அருளாள்வார் என்பது இரண்டாம் வேற்றுமைத் தொகை. நான்க னுருபு உபகாரப் பொருளது. அல்லல் வளி வழங்குதலா லாம் காரிய மாதலின், வளி வழங்கு மல்லல் என்புழி செய்யு மென்னும் பெயரெச்சத்து உம் மீறு கால வெழுத்துப் பெருது காரியப் பெயர் கொண்டு முடிந்த தென்க. மா ஞாலம் பண்புத்தொகை. அதன் பின் அத்துச் சாரியையும் ஏழ னுருபையும் விரித் துரைக்க.

ஈண்டு அருளாள்வார்க்கு அல்ல லில்லை யென்பது மேற்கோள். அருளுடைமையான் என்னும் ஏதுவை உடம்பொடு புணர்த்த லென்னு முத்தியாற் பெற வைத்தார். ஏனையோர் என்பது ஏதுவை வலியுறுத்தும் விபக்கச் சொல். யாண்டு அல்லல் இன்றன்று ஆண்டு அருளுடைமை இன்று; ஏனையோர் போல என ஏதுவை வலியுறுத்தியவாறு காண்க. இது எதிர்மறை யனுமானம். இதனானே இன்மையை ஒரு தனி யளவையாகக் கொண்டும், எதிர்மறை யனுமானத்தைக் கொள்ளாதும் நின்ற வேதாந்த மதம் ஆசிரியர்க்கு உடம்பா டன்று என்பதுங் காண்க. அருளாளாதார்க்கு அவர் இறக்கு ஞான்று பிராண வாயு மேற்படுதலா லாம் அல்லலை 'வலதழிய விரகழிய உரைகுழறி விழிசொருகி வாயு மேலிட ஆவி

போகு நாள்' என்பதனானு மறிக. அருளாள்வார் தம் உடம்பை விடு ஞான்றும் அவர் மனம் ஞேயத்தே சலிப் பின்றி நிற்கு மதனால், பிராண வாயு நின்று இன்பத்தை யன்றித் துன்பத்தைக் கொடா தென்று தாம் காண்டல், உரை யென்னு மளவைகளாற் கண்ட வுண்மையை அருளாளாதா ராகிய ஏனையோர்க்கு அஞ் ஞான்று உளவாகும் மனஞ் சலிப்புக் காரணத்தான் நிகழும் பிராண வாயு மேலிடுத லாகிய அல்லலொடு சார்த்தி எதிர்மறை யனுமானத்தால் விளக்கி வைத்தவா றுயிற்று.

இக் குறளுக்குப் பரிமேலழகர், 'அருளுடையார்க்கு இம்மையிலும் ஒரு துன்பமும் உண்டாகாது, அதற்குக் காற் றியங்குகின்ற வளப்பத்தை யுடைய பெரிய ஞாலத்து வாழ்வார் சான்று' என்னும் உரையைத் தந்து, உரை விளக்கத்தில் ஞாலம் என்பதை ஆகுபெய ரென்றும், அருளாள்வார்க்கு அல்ல லுண்டாக ஒரு காலத்தும் ஓரிடத்தும் ஒருவருங் கண்டறிவா ரின்மையின், இன்மை முகத்தான் ஞாலத்தார் யாவருஞ் சான் றென்று ஆசிரியர் கூறினர் என்றார்.

மல்லன் மா ஞாலம் என்பது ஒரு தொகை நிலைத் தொட ராகலான், வளி வழங்கும் என்னுந் தொடர் மல்லல் என்பதை விசேடியா தென்னு முண்மையை உணராது, அதனை விசேடிக்க வைத்தமையானும், ஞாலம் என்பதை ஆகுபெய ரெனக் கொண்டும், மல்லல், மா என்பனவற்றை ஆகுபெயர்ப் பொருளை விசேடிக்க வையாது, இயற்பெயர்ப் பொருளையே விசேடிக்க வைத்து உரை செய்தமையாலும், இனிக் கண்டறியார் இன்மை முகத்தான் அருளாள்வார்க்கு அல்லல் உண்டெனவோ இல்லெனவோ சாதித்தல் ஏலா தென்பது எல்லாரு மறியக் கிடந்த தொன் றெனினும், அது அவர்க்கு அவ் வேதுவான இல்லை யென்று சாதிக்கத் துணிந்தமையானும், அழகியா ருரையைப் போலியுரை யென்க.

இப் பாட்டு என் னுதலிற்றோ வெனின், அரு ளுடைமை யாகிய செல்வத்தை ஆள்வார்க்கு மறுமைக் கண்ணே யன்றி, இம்மைக்கண்ணும் ஒரு துன்பமும் உண்டாகா தாகலான், அதனை யாள்க. எ-து.

(6) அருளில்லார்க் கவ்வுலக மில்லைப் பொருளில்லார்க்
இவ்வுலக மில்லா கியாங்கு.

(இ-ள்.) பொருள் இல்லார்க்கு இவ் வுலகம் இல்லாகி யாங்கு—தம் உடம்பு இறக்கு ஞான்று பொரு ளுடைமை யாகிய செல்வம் இல்லார்க்கு மறு பிறப்பாய் இவ் வுலகப் பிறப்பு இல்லை யாகிய அவ் வண்ணம்; அருள் இல்லார்க்கு அவ் வுலகம் இல்லை—அஞ்ஞான்று அரு ளுடைமை யாகிய செல்வ மில்லார்க்கு மறு பிறப்பாய் மேலுலகப் பிறப் பில்லை, ஆகலான் அரு ளாள்க. எ-று.

அருள், பொருள், அவ் வுலகம், இவ் வுலகம் என்பன ஆகுபெயர். நான்க னுருபு இரண்டிடத்தும் உபகாரப் பொருளது. ஆகிய வாங்கு என்பது கூறியாங்கு, உரைத் தாங்கு என்பன போன்று பெயரெச்ச வீறு தொகுத்தல் விகாரம் பெற்று ஆகியாங் கென நின்றது. பொரு ளில்லார்க்கு இவ் வுலக மில்லை யென்றல் முக் காலத்தினு மொத் தியல்வ தாயினும், நிகழ்காலத்தாற் கூருது, ஆகிய வென இறந்த காலத்தாற் கூறியது எற்றுக் கெனின், அஃது தொல்லாசிரியர் துணி பென்று வற்புறுத்தற்கே யென்க.

தம் வாழ்க்கையில் பொரு ளுடைமை யாகிய செல்வம் நன்கு விளங்கப் பெற்றூர்க்கே அவர் உடம் பிறக்கு ஞான்று அச் செல்வ முளதாகு மென்பதும், அவரே மறுமையை இவ் வுலகின்கண் துய்ப்ப ரென்பதும் அறநூற் றுணி பாகலான், இத் துணிபை யடிக்கொண்டு பொரு ளில்லார்க் கிவ் வுலக மில்லை யென்று கூறினர். அவ்வாறே இம்மையில் அரு ளுடைமை யாகிய செல்வத்தை நன்கு உளதாக்கி

வைத்தார்க்கே அவர் உடம்பு இறக்கு ஞான்று அச் செல்வம் கைவரு மென்றும், அவரே மறுமைக்கண் மேற்கதி வீடு பேறுகள் பெறுவா ரென்றுங் காட்டுவாராய் அறநூற் றுணிபொடு சார்த்தி அரு ளில்லார்க் கவ் வுலக மில்லை யென்றூ ரென்க.

இனி, அரு ளுடைமை யாகிய சாதனத்தில் உறைத்து நிற்பாரே உண்மைச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நெறிகளுள் சரியையிற் சரியை, கிரியை, யோகம் ஞானம், கிரியையிற் சரியை, கிரியை, யோகம், ஞானம், யோகத்திற் சரியை கிரியை, யோகம், ஞானம், ஞானத்திற் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பனவற்றைத் தலைப் பட்டு நின்று, தாம் செய்யும் புண்ணிய பாவங்கள் தம்மைப் பந்த முறுத்துதற்கண் பொன் விலங்கும் இருப்பு விலங்கும் போன்றன வெனக் கொண்டு, அவற்றை ஒப்ப நோக்கல் முயன்று, தவஞ் செய்ய, அந் நோக்கம் நேராகாவிடின் மறுமைக்கண் தம் தவத்திற் கேற்ப அதன் பயனுகச் சுத்த வித்தைக்குக் கீழுள்ள புவனபதிகளுடைய சிவலோகத்துச் சாலோகம், சாமீபம், சாரூபம் சாயுச்சிய மென்னும் பத முத்திகளை யெய்துவ ரென்பதும், அந் நோக்கம் நேராயின் மறுமைக்கண் அவ்வாறே சுத்த வித்தைக்குமே லுள்ள புவனபதிகளுடைய சிவலோகத்துச் சாலோகம், சாமீபம், சாரூபம் என்னும் அபரமுத்திகளைத்தான் சாயுச்சியம் என்னும் பரமுத்தியைத்தான் அடைவ ரென்பதும் ஆகம நூற் றுணி பாகலான், இத் துணிபை வலியுறுத்தும் பொருட்டு அரு ளில்லார்க்கு மறுமைக்கண் மேற்கதி வீடு பேறுகள் இல்லை யென்று உவமையின்மேல் வைத்துக் கூறினு ரென்க.

இக் குறளுக்குப் பரிமேலழகர், 'பொரு ளில்லாதார்க்கு இவ் வுலகத் தின்பம் இல்லை யாயினுற் போல உயிர்கண் மேல் அரு ளில்லாதார்க்கு வீட் டுலகத் தின்ப மில்லை' என் னும் உரையையும், 'இவ் வுலகத் தின்பங்கட்குப் பொருள்

காரண மானாற் போல, அவ் வுலகத் தின்பங்கட்கு அருள் காரண மென்ப தாயிற்று' என்னும் உரை விளக்கத்தையுந் தந்தார்.

உரையில் பொரு ளின்மை அரு ளின்மை என்பன முறையே இவ் வுலகத் தின்ப மின்மை, அவ் வுலகத் தின்ப மின்மைகட்குக் காரணங்க ளாயவாறு காட்டி, உரை விளக்கத்தில் அவற்றின் மறுதலைக ளாகிய பொருள், அரு ளென்பன அப் பயன்களினுடைய மறுதலைகளாகிய இவ் வுலகத் தின்பம் அவ் வுலகத் தின்பங்கட்குக் காரணங்க ளாகு மென்று கூறுதல் அழகியாரது நுண் மாண் புல மைக்கு இழுக்காதல் அறிக.

இனிப், பொருளான் நல்கூர்ந்தார்கண்ணும், பொரு ளின்றிய காரணத்தான் நுகர்ச்சி வயத்த தாகிய இன்ப மின் றெனினும், பொருளை நினைந்து நினைந்து இன்புறுதல் உளவாகலானும், இவ் வின்பமும் வீட்டுலகத் தின்ப மன்றி இவ் வுலகத் தின்பமே யாகு மென்பதனானும், பொரு ளில்லார்க்கு இவ் வுலகத் தின்ப மில்லை யென்னு முரை போலி யாயவாறு காண்க. இவ் வுரையை யுட்கொண் டன்றே வீரசோழிய வுரைகாரர் இப் பாட்டைத் தர்க்கத் தில் எடுத்துக்காட்டுப் போலிக்கு உதாரணமாகக் காட்டி னர். போலி யாய எடுத்துக்காட்டை ஆசிரியர் தந்தா ரென்பது அவரது பெருமைக் கோர் வீழ்க்கா டாகலான், அங்ஙனங் கொள்ளாது, அது போலி யாகா வகை யுரை கண்டமை யறிக.

இனி, அரு ளுடைமை யாகிய சாதனத்தி லுறைத்து நில்லாதார்க்கு அவர் இறக்கு ஞான்று அச் சாதன மின்மை யும், மறுமைக்கண் மேற்கதி வீடுபேறுக ளாகிய பயன்க ளுடைய வின்மைகளு முளவாகு மென்பது பற்றி, இம்மைக் கண் அப் பயன்களுடைய குறிக ளுள்ளா ராவார் அச் சாதனத்தில் உறைத்து நிற்பா ரென்பது பெறப்படும்.

ஆகவே, இப் பாட்டு மேற்கதி வீடுபேறுக ளாகிய பயன்க ளடைய விரும்பின், அப் பயன்களுடைய குறிகளை உண்டு பண்ணி அரு ளாள்க. எ-து.

(7) தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றாற் றேரி
னருளாதான் செய்யு மறம்.

(இ-ள்.) அருளாதான் செய்யும் அறம் தேரின்—உயிர் கண் மாட்டு அரு ளில்லாதவன் செய்யும் அறத்தை ஆராயின், தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்று-ஞான மில்லாதவன் ஒருகால் மெய்ப் பொருளைத் தலைப்பட்டாற் போலும், ஆகலான் அரு ளாள்க. எ-று.

தெருளாதான், அருளாதான் என்பன வினையாலணை யும் பெயர். மெய்ப் பொருள் பண்புத் தொகை. அஃதாவது, எக் காலத்துந் தன் னியல்பில் நிலைபெற் றுள்ள தாகிய இறை. அற்று—உவம வுருபு. உவமை பய னுவமை. ஆல்—அசைநிலை. செய்யு மற மென, செய்யு மென்னும் பெயரெச்சத்து உம் மீறு கால வெழுத்துப் பெறுது பொருட்பெயர் கொண்டு முடிந்தது. ஈண்டு மெய்ப் பொருள், அறம் என்பன குறிப்பு மொழிகளாய்ப் பொய்ப் பொருள், பாவம் என்பனவற்றை யுணர்த்தி நின்றன. ஞானச் செல்வம் இல்லாதவனுக்கு இறை யனுபவம் உண்டாகாது. அதுபோல மக வெனப் பல்லுயி ரனைத்தை யும் ஒக்கப் பார்க்கும் அருட் செல்வம் இல்லாதவனுக்குச் சிவ புண்ணிய மாகிய அறம் கைவராது, பாவமே வரும் என்று கூறியவா ருயிற்று.

துறவை மேற்கொண்டு நின்று உயி ரனைத்தையு மொக் கப் பார்த்தல் முயன்று, அரு ளுடைமைச் சாதனஞ் செய் வாரே அப் பார்வை நேராகாவிடின் பத முத்திப் பேற டைவ ரென்றும், பின்னர் அன்னூர் அம் முத்தி யெய்தி நின் றவாறே யிரு வினை யொப்பு நிகழ, ஞான வாயிலாக அபர முத்திகளைத்தான் பரமுத்தியைத்தான் பெறுவ ரென்றும்,

அவ் வொப்பு நிகழா வழிப் பதமுத்தி யின்பந் துய்த்தொழிந்து, மீள நிலத்தின்கட் டோன்றி, அரு ளுடைமைச் சாதனஞ் செய்து, வீடுபேறடைய முயல்வர் என்றும், அன்றி அப்பார்வை நேராயின் ஞான வாயிலாக அபர முத்திகளைத் தான் பர முத்தியைத்தான் தலைப்படுவ ரென்றும், இவருள் அபர முத்தி யடைந்து நின்றார்க்கு ஆணவ மல வாசனை மாத்திர முள தாகலான், அன்னார் ஆண்டிருந்தே, பரமுத்திப் பேறு பெறுவ ரொழிய, மீண்டும் நிலத்தின்கட் பிறவா ரென்றும், ஆகமங்கள் கூறுவனவற்றைத் துணைகொண்டு அருட் செல்வ மில்லாதார்க்குச் சிவ புண்ணிய மாகிய அறங் கைவரா தென்பது அறியக் கிடப்பினும், அவ் வாகமங்களைக் கல்லாதார்க்கு அதனை யறிவுறுத்துவான் பொருட்டுத் தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்று வென அவ ருள்ளிட்டு அறிவுடையோர் பலரானு மறியக் கிடந்த வுவமையின் மேல் வைத்துக் கூறினா ரென்க.

இக் குறளின் உரை விளக்கத்தில் பரிமேலழகர், 'மெய்ப்பொரு ளென்பது மெய்ந் நூலிற் சொல்லும் பொருள்' எனக் கூறி, 'நிலைபெற்ற ஞான மில்லாதவன் இடையே மெய்ப்பொருளை யுணர்ந்தால் அதனைத் தன் ஞான மின்மையால் தானே யழித்துவிடும். அதுபோல அருளாதான் இடையே அறஞ் செய்தால் அதனைத் தன் னருளாமையால் தானே யழித்துவிடு மென்ப தாயிற்று.' என்றார்.

மெய்ப் பொரு ளென்பது மெய்ந் நூலிற் சொல்லும் பொருள் என்று கூறினமையானே, மெய்ப் பொருளை யுணர்த லென்பது அந் நூலின் றாற்பரியத்தை யுணர்த லாகும். ஆயின் மெய்ந் நூலின் றாற்பரியத்தை யுணர்ந்தானுவான் அவ் வுணர்வைத் தன் ஞான மின்மையால் தானே யழித்துவிடு மென்பது, அதனை நிலை பெற்ற ஞான மில்லாத காரணத்தானே மறந்துபோவ னென்ப தாகும், அதுபோல அருளாதான் இடையே அறஞ் செய்தால் அதனைத் தன்

னருளாமையால் தானே யழித்துவிடு மென்பது, நிலை பெற்ற அருளுதல் இல்லாத காரணத்தானே அதனைச் செய்யாது விடுவன் என்றபடி.

ஒரு நூலின் முற்பரிய முணர்ந்தா னுவான் அந் நூலின் கண் ணுள்ள அதிகாரங்கள் நுதலியனவும், அவ் வதிகாரங் களி லுள்ள ஒத்துக்கள் நுதலியனவும், அவ் வோத்துக்களி லுள்ள சூத்திரங்கள் நுதலியனவும், அச் சூத்திரங்களி லுள்ள சொற் றொடர்கள் நுதலியனவும் உணரப்பெற்று னாகலான், அதனை மறத்தல் அவனுக்கு ஏலாத தோர் செய்தி. அது போல அருளாதானுக்குத் தான் செய்யு மறத்தை விடுதல் முடியாத தோர் செய்தி என்பதே படும். இஃது பொருட் கேடு பயந்து நிற்கின்ற தாகலான், அழகியார் தன் னுரை விளக்கத்தில் உவமை வழீஇப் பொருளைக் கெடுத்தா ரென்க.

இப் பாட்டு என் னுதலிற்றோ வெனின், அருட் செல்வம் இல்லாதவனுக்குச் சிவபுண்ணியம் கைவரா தாகலான், அது கைவரல் விழையின், அரு ளாள்க. எ-து.

(8) பொருணீங்கிப் பொச்சாந்தா ரென்ப ரருணீங்கி
யல்லவை செய்தொழுகு வார்.

(இ-ள்.) அருள் நீங்கி அல்லவை செய் தொழுகுவார்- துறவை மேற்கொண்டும் அரு ளுடைமை யென்னுஞ் சாதனத்தை நீங்கி அஃதல்லாத பிற சாதனங்களைச் செய் தொழுகுவாரை; பொருள் நீங்கி பொச்சாந்தார் என்பர்— திருவடிப்பணி யுடைமை யாகிய செல்வத்தை நீங்கி, நீங்கிய வக் காரணத்தானே அச் செல்வத்தை மறந்தவ ரென்று சொல்லுவர் அறிந்தோர்; ஆகலான் அருளாள்க. எ-று.

(8) பொருள், உறுதிப் பொருள். அஃதாவது திருவடிப் பணி. ஈண்டு அது ஆகுபெயராய்த் திருவடிப்பணி

யுடைமையைக் குறிக்கின்றது. பொருள், அருள் என்பன வற்றின் பின் இரண்ட னுருபை விரிக்க. பொரு ணீங்கிப் பெர்ச்சர்ந்தார் என, நீங்கி யென்னுஞ் செய்தெ னெச்சத் திரிபு இறந்த காலம் பற்றிக் காரணப் பொருட்டாய் நின்றது. அருள்—அரு ளுடைமை. அல்லவை என்றது அஃ தல்லாத பிற சாதனங்களை, அரு ணீங்கலும், அல்லவை செய்தலும் ஒழுகுதலோடு உட னிகழ்தலான், நீங்கி, செய்து என்னும் வினை யெச்சங்கள் நிகழ்காலம் பற்றி வந்தன வென்க. ஒழுகுவார், வினையாலணையும் பெயர். அதன் பின் இரண்ட னுருபை விரிக்க. வகர இடைநிலை காலங் காட்டாது தன்மை யுணர்த்தி நின்றது. அறிந்தோர், சொல்லெச்சம்.

மூ வகைப் பிறவித் துன்பங்களால் நெருக்குண்டு, அவற்றை நீக்கும் பொருட்டுத் துறவு பூண்டு, சத்தும் சித்தும் ஆனந்தமு மாகிய தன் னியல்பில் நிற்கும் சிவனே நான் என்று சிவோகம் பாவனை செய்து, திருவடிப்பே றடைய நிற்பா ராவார், உயிர், உயி ரில் பொரு ளென்னும் இரண்டன்கண்ணும் கண் அருக்கன் போல வேறுவேருய் நிற்கின்ற பேத நிலைமையும், உடல் உயிர் போல ஒற்றுமைப் பட்டு நிற்கின்ற வபேத நிலைமையும், குண குணி போல ஒருவாற்ருன் வேற்றுமைப்பட்டும் ஒருவாற்ருன் ஒற்றுமைப் பட்டும் நிற்கின்ற பேதாபேத நிலைமையு மன்றி, அம் மூன்றற்கும் பொதுமையான் அறிவொளி போல் அத்து விதமாய் நிற்குஞ் சிவனே அவ் வுயிர், உயி ரில் பொருள் ஆகிய எல்லாவற்றினு மிருப்பதாகக் கொண்டு, அவை யெல்லாம் அச் சிவனது வடிவே யாயினும், அவற்றுள் தம் அருள் செறித்தற் குரிய உயிர் வர்க்கத்தில் பொது வகை யானும், இவற்றுள்ளும் இறைபணி வழுவாது நின்று அடிமைத் திறம்பூண் டொழுகு முயிர்கண் மாட்டுச் சிறப்பு வகையானும் அருள் செலுத்தி நின்று, அதனை நினைந்து நினைந்து இன்புறுதற் கேது வாகிய அருட் செல்வத்தை

ஊக்கி நிற்பா ராயின், இவரே திருவடிப் பணி யுடைமை யாகிய செல்வத்தி னிற்பா ரென்றும், அச் செல்வத்தை மறவாதவ ரென்றும் சொல்லப்படுவா ரென்பது கருதிய வராய், அச் சிவோகம் பாவனை செய்தற்கண், அடிமைத் திறத்தி னிற்கும் உயிர்கண்மாட்டுச் சிறப்பு வகையானும் ஏனை யுயிர்கண்மாட்டுப் பொது வகையானுஞ் செய்யப் படும் அருளைத் தவிர்ந்து, அதனானே அருளுடைமைச் செல்வத்தை நீங்கி நின்று, பிற சாதனஞ் செய்து நிற்பா ராவார் இறைபணி வழீஇன ராகலான், அவர்க்குச் சிவோகம் பாவனை சித்தி யெய்தா தென்று கூறுவாராய், அன்னார் திருவடிப் பணிச் செல்வத்தை நீங்கினா ரென்றும், அதனானே அச் செல்வத்தை மறந்தா ரென்றுஞ் சொல்லுவர் அறிந்தோர் என்று கூறினா ரென்க.

இக் குறளுக்குப் பரிமேலழகர், 'உயிர்கண் மாட்டுச் செய்யப்படும் அருளைத் தவிர்ந்து, தவிரப்படுங் கொடுமை களைச் செய் தொழுகுவாரை முன்னும் உறுதிப் பொருளைச் செய்யாது தாந் துன்புறுகின்றமையை மறந்தவ ரென்று சொல்லுவர் நல்லோர்' என்னும் உரையையும், 'உறுதிப் பொருள் அறம். துன்புறுதல் பிறவித் துன்பம் மூன்றனையும் அனுபவித்தல். மறந்தில ராயின் அவ்வாறு ஒழுகா ரென்பது கருத்து' என்னும் உரை விளக்கத்தையுந் தந்தார்.

தவிரப்படுங் கொடுமைகளைச் செய் தொழுகுவாரைப் பற்றிய கூற் ருக்கி யுரை கண்டமை இப் பாட்டைக் கூடா வொழுக்கத்தி லன்றி ஈண்டு வைத்த ஆசிரியர் கருத்தொடு முரணுதலானும், பொச்சாந்தா ரென்னும் வினைமுற்றுக்குச் செயப்படுபொருள் பொருள் என்றே கிடப்ப, அதனை யொழித்துப் பிறவித் துன்பங்க ளென்று வலிந்து கொண்டமையானும், இன்னும் பிறவித் துன்பங்களை முன் னினைந்திருந்தா ரென்பதற்கு ஒரு காரணமுந் தாராது அவற்றை மறந்தார் என்பவர், மறந்தார் என்னுஞ் சொல்

இலக்கணையான் ஒருபோதும் நினைந்தா ரல்லர் என்பது பட நின்ற தென்று உரை விளக்கத்திற் கூறுமையானும், உறுதிப் பொரு ளென்பது அற மென்று கூறியவர் அஃது இன்ன வற மென்று விளங்கச் சொல்லாமையானும், அழகியா ருரையை வல்லுரை என்க.

இப் பாட்டு என் னுதலிற்றோ வெனின், திருவடிப் பணி செய்கின்றார் இவ ரென்று அறிந்தோரின் புகழுரை வேண்டின் அருளாள்க. எ-து.

(9) பொருளற்றார் பூப்ப ரொருகா லருளற்றா
ரற்றார்மற் றாத லரிது.

(இ-ள்.) பொருள் அற்றார் ஒருகால் பூப்பர்—ஒரு பிறப்பில் ஊக்க மின்மையானே பொரு ளுடைமையை நீங்கின ராவார், அந் நீங்கிய துணையானே அவ் வுடைமை பற்றி உண்டாம் பசு புண்ணிய மாகிய அற மின்றி அழிந்தா ராயினும், அப் பிறப்பில் பின் னொரு காலத்து ஊழ் கடை கூட்ட அவ் வறத்தினாற் பொலிவர்; அருள் அற்றார் அற்றார் மற்று ஆதல் அரிது—அவ்வா றன்றி ஒரு பிறப்பில் ஊக்க மின்மையானே அரு ளுடைமையை நீங்கின ராவார் அவ் வரு ளுடைமையான் வரும் சிவ புண்ணிய மாகிய அற மின்றி அழிந்தாரே, அப் பிறப்பில் பின் னொரு காலத்தும் ஆத லில்லை, ஆகலான் அரு ளாள்க. எ-று.

பொருள், அருள் என்பன ஆகுபெயர். அற்றார் என்னுஞ் சொல் மூன்றனுள் முன் னிரண்டும் நீங்கினார் என்னும் பொருளில் வந்த வினையாலணையும் பெயர்; பின்னது அழிந்தார் என்னும் பொருளில் நின்ற வினை முற்று. பொரு ளற்றார், அரு ளற்றார் என்பன இரண்டாம் வேற்றுமைத் தொகை. அவை யன்ன தாதலை 'அற்றனன் துயர மெல்லாம் அருந்தவப் பயனான்.........' என்பதனானு மறிக. 'அருளற்றா ரற்றார்' என எதிர்காலத்துக் குரிய வினைச்சொற் பொருண்மை நூற் றெளிவு பற்றி இறந்த

காலத்தாற் சொல்லப்பட்டதை 'வாராக் காலத்து வினைச் சொற் கிளவி' என்றற் றொடக்கத்துச் சூத்திரத்தா னமைக்க. மற்று வினைமாற்றின்கண் வந்தது. அரிது என்பது இன்மைப் பொருளில் வந்த ஒன்றன்பாற் குறிப்பு வினைமுற்று.

'ஆக்க மதர்வினாய்ச் செல்லு மசைவிலா, வூக்க முடையா னுழை' என்பதனால் ஊக்கமுடைமை பற்றிப் பொரு ளுடைமை நிகழு மென்றும், 'உடைய ரெனப்படுவ தூக்கமஃ தில்லா, ருடைய துடையரோ மற்று' என்பதனால் ஊக்க முடைமையே பொரு ளுடைமையினுஞ் சிறந்த தென்று சாதித்தற் கேது தருவாராய், ஊக்க மில்லாதார் தம் பொருளைக் காக்கு மாற்றல் இல ராகையான், அன்னார் ஒருகால் தம் பொரு ளுடைமையை ஊக்க மின்மையானே நீங்குவ ரென்றும் மேற் கூறுவார், ஈண்டு ஒரு பிறப்பில் ஒருகால் யாவராயினும் அவ் வுடைமையை அவ் வேதுவானே நீங்கினா ராயின், அன்னார் அந் நீங்கிய வாற் றானே பொரு ளுடைமையான் வரும் பசு புண்ணிய மாகிய அற மின்றி அழிந்தா ராயினும், அப் பிறப்பிலே பின் னொருகால் ஊழானது மேற்பட்டுப் பொருளை யீந்து அவரை அவ் வறத்தின்கண் உய்க்கு மென்னும் அற நூற் றுணிபு கூறுவாராய், 'பொருளற்றார் பூப்ப ரொருகால்' என்றார்.

இனி, 'பொருணீங்கிப் பொச்சாந்தா ரென்ப ரரு ணீங்கி, யல்லவை செய்தொழுகு வார்' என்பதனால் துறவை மேற்கொண்டும் அருளுடைமையை நீங்கி அஃ தல்லாத பிற சாதனங்களைச் செய் தொழுகுவா ராவார், திருவடிப் பணி யாகிய உறுதிப் பொருளை நீங்கி, அதனானே அப் பொருளை மறந்தா ரெனப்படுவ ரென்று முன்னர்க் கூறியவர், ஈண்டு ஊக்க மின்மை பற்றி அரு ளுடைமையை நீங்கினா ராவார் திருவடிப் பணி யாகிய உறுதிப் பொருளை நீங்கி நிற்பா ராகலான், அன்னார் தம்மைத் திருவடிப்

பணிக்கண் உய்க்குஞ் சிவ புண்ணிய மாகிய அறமின்றி அழிந்தா ராவர் என்னும் ஞான நூற் றுணிபு தருவாராய், 'அருளற்றார் அற்றார்' என்பார் பொருளற்றார்க்கும் அருளற்றார்க்கும் அறக் கேடு உண்டாகு மென்று ஒரு புடை யொற்றுமை கூறினா ராயிற்று.

இனி, அரு ளுடைமை யென்பது தம்மோடு வேற்றுமைப் பட்டு நிற்கும் வேறோர் குணி யாகிய பொருளான் விளக்கப்படும் பொருளுடைமை போலன்றித், தம்மோடு ஒருவாற்றான் ஒற்றுமைப்பட்டும் ஒருவாற்றான் வேற்றுமைப்பட்டும் நிற்கும் தம் குண மாகிய அருளைப் பற்றி யெழுவ தொன் றாகலானும், ஊக்க முடைமையே அருளையேனும் அருளுடைமையை யேனும் புலப்படுக்கு மாகலானும், ஊக்க மின்மையானே ஒரு பிறப்பில் ஒருகால் யாவராயினும் அரு ளுடைமையை நீங்கினா ராயின், அவ் வூக்க மின்மையானது அவர் குணமாய்ப் புலப்பட்டு நிற்கும் வரை, அப் பிறப்பில் பின் னொருகாலும் ஊழா னாயினும் பிறவாற்றா னாயினும் அன்னார் அவ் வரு ளுடைமையான் வருஞ் சிவ புண்ணிய மின்றி அழிந்துபோத லன்றி ஆதல் இல்லை யென்னும் ஞான நூற் றுணிபு தருவா ராய், 'மற்றாதலரிது' என்று கூறுதற்கண், அரு ளற்றார்க் குளவாகும் அறக் கேடு பொரு ளற்றார்க் குள வாவது போலன்றி மிக்க தென அவற்றிடை வேற்றுமை தோன்ற வைத்த வாறு காண்க.

இக் குறளுக்குப் பரிமேலழகர், 'ஊழான் வறிய ராயினார் அது நீங்கிப் பின்னொரு காலத்துச் செல்வத்தாற் பொலிவர்; அவ்வா றன்றி அரு ளிலாதார் பாவம் அறாமையின் அழிந்தாரே, பின் ஒரு காலத்தும் ஆத லில்லை' என்னும் உரையைத் தந்தார்.

'அவ்வா றன்றி அரு ளிலாதார் பாவம் அறாமையின் அழிந்தாரே' என்றமையான் ஊழான் வறிய ராயினார்

பாவம் அறுதலின் செல்வத்தாற் பொலிவர் என்பது பெறப்படும். பட, அருளின் நல்கூர்ந்தார்க்குப் பாவம் அருமையும், பொருளின் நல்கூர்ந்தார்க்குப் பாவம் அறுதலும் பொருந்து மாற்றுக் கொவ்வா வாகலான், அழகியார் உரை வழீஇனு ரென்க.

இப் பாட்டு என் னுதலிற்றோ வெனின், எடுத்த பிறப்பைக் கெடுக்காமை வேண்டின் அருளாள்க. எ-து.

(10) வலியார்முற் றன்னை நினைக்கதான் றன்னின்
மெலியார்மேற் செல்லு மிடத்து.

(இ-ள்.) தன்னின் மெலியார் மேற் செல்லுமிடத்து—தன்னின் மெலியார் தன்னைத் தாக்குமிடத்து; வலியார்முன் தன்னை தான் நினைக்க—அவர் முன்னே யன்றித் தன்னைத் தாக்கும் வலியார் முன்னுந் தான் நிற்பதாகத் தன்னைத் தான் நினைக்க, இந் நினைவுகளான் அருளாள்க. எ-று.

வலியார், மெலியார் என்பன பண்பு கொள் பெயர்கள். சிறப்புப் பற்றி உயர்திணைமேற் கூறினரேனும், அஃறிணை யுங் கொள்ளப்படும். முன் என்பது இடப்பொருள் பற்றி வந்த ஏழ னுருபு. அதன் பின் இறந்தது தழீஇய வெச்ச வும்மை விகாரத்தாற் றொக்க தென்க. நினைக்க—வியங் கோள். ஐந்த னுருபு உறழ்பொருவுப் பொருளது. மேற் செல்லுமிடத்து என்பது இடத் தென்னு மீற்றான் வந்த வினையெச்சம்.

வீடுபே றடைதற் பொருட்டுத் துறவை மேற்கொண்டு ஒழுகுவானுக்கு அரு ளுடைமைச் சாதனமே ஞானசிரியப் பேற்றையும், அவர் வாயிலாகத் தவப் பேற்றையும் உதவு மென்று கொண்டவர், ஈண்டு அவ் வருளுடைமைச் சாதனஞ் செய்து நிற்பானுக்கு ஒரோ வொருகால் அவ னின் மெலியார் அவனைத் தாக்க வரும் பொழுது தோற் றஞ் செய்யும் வெகுளியானது அச் சாதனத்தை அலைக்கு மாகலான், அவனை அவ் வெகுளியின் நீக்கி அச் சாதனத்தின்

நிலை நிறுத்துதற் குபாயங் கூறுவாராய் இப் பாட்டைத் தந்தா ரென்க.

தன்னின் மெலியார் தன்னைத் தாக்குமிடத்துத் தோற்றக் கூடிய வெகுளியை, அத் தாக்குதற்கண் அவர் முன் தான் நிற்கும் நிலையினை நினைக்கும் அகமுக நோக்கானே எழாமற் செய்து, ஆராய்ச்சியைப் பிறப்பித்து, இனி அம் மெலியார் தன்னைத் தாக்குழித் தன்னின் வலியார் தன்னைத் தாக்குமிடத்துத் தான் அஞ்சி நிற்கும் நிலையினை நினைப்பின், இந் நினைவு அவ் வாராய்ச்சியை வலுப் பெறச் செய்து, வெகுளியையும் அச்சத்தையும் துன்ப நிலையுட் புகுத்தும் பண்புகளெனத் தோற்றுவித்து, இன்ப நிலையுட் செலுத்தும் அரு ளுடைமைச் சாதனத்தின்கண் உய்க்கு மென்று கூறியவா றுயிற்று.

இக் குறளுக்குப் பரிமேலழகர், ‘தன்னின் வலியார் தன்னை நலிய வரும்பொழுது அவர் முன் தான் அஞ்சி நிற்கும் நிலையினை நினைக்க, அருளில்லாதவன் தன்னின் எளியார் மேல் தான் நலியச் செல்லும் பொழுது’ என்னும் உரையைத் தந்து, இதனுல் அருள் பிறத்தற்கு உபாயங் கூறப்பட்ட தென்ருர்.

எளியாரை நலியச் செல்லும் பொழுதே இந் நினைவு அருள் பிறத்தற்கு உபாய மாவ தன்றிப், பொது வகையான் உபாய மாகாமையானும், இனி மயக்க வுணர்வு மேலிட்டு நலியச் செல்லும் பொழுது இந் நினைவு உண்டாகு மென்று கருதுதல் உளநூற் கோட்பாட்டிற்கு ஒவ்வாது என்ற காரணத்தானும், அழகியா ருரையைப் போலியுரை யென்க.

இப் பாட்டு என் னுதலிற்றே வெனின், மெலியார் தாக்குத லாகிய வெகுளிக் காரணம் தோன்றுழி, வலியார் தாக்குத லாகிய அச்சக் காரணத்தையும் நினைந்து, வெகுளி யினையும் அச்சத்தினையும் உயிரின் பொது வியல்புக ளெனக் கண்டு அரு ளாள்க. எ-து.

(தொடரும்.)

இசைத் தமிழ்

திரு. சங்கீதம் ப. சுந்தரேசன்,
தேவாரத், திருப்புகழ் இசையாசிரியர், அரசர் கல்லூரி, திருவையாறு.

2. ஏழிசை

மிக மிகப் பழைய காலத்தில் நமது பழந் தமிழ் நாட்டிலும் இசைக் கலைக்கு அடிப்படை யான சிற்றெல்லை யிசை யமைப்பு ஐந் திசையே யெனல் சங்க நூல்களாலும், அந் நூல்களை யாராய்ந்த பெரும் பேராசிரியர்களின் ஆராய்ச்சி நூல்களினாலும் நன்கு அறியக் கிடக்கின்றது. பழந் தமிழ் நாட்டுப் பெருமக்கள் குழலிலும் வில் யாழிலுமே முதன் முதலாக ஐந் திசையைத் தோற்றுவித்தனராம். அப் பெரு மக்களே, அவ் வைந் திசைகட்கு,

க.	தாரம்	ச.	உழை
உ.	குரல்	ரு.	இளி
ந.	துத்தம்		

எனப் பெயரு மமைத்தனர்.

பழைய வில் யாழெனுங் கருவியில் இவ் வைந் திசைகளையே இரு நிரலாகக் கொண்டு இசைக் கொரு நரம்பாகப் பத்து நரம்புகள் கட்டப்பட்டன. இவ்வா றமைந்த பத்து நரம்புகளின் இசைப் பெயர்கள்,

க.	தாரம்	சா.	தாரம்
உ.	குரல்	எ.	குரல்
ந.	துத்தம்	அ.	துத்தம்
ச.	உழை	கூ.	உழை
ரு.	இளி	ய.	இளி

என வமைந்து நின்றன.

இவ் விசைகள் யாவும் ஒவ்வோ ரிசையை முதலாகக் கொண்டு ஐந் தைந் திசைத் தொகுதியாக ஐ வகை நிரல்களாய் நிற்பன. இயற்கையி லமைந்த முத லமைப் பாகிய இவ் வை வகை நிரல்களை ஐந் திசை நின்ற நிர லெனக் குறித்து அட்டவணைப் படுத்துவாம்.

ஐந் திசை நின்ற நிரல்

முதலாம் நிரல்	இரண்டாம் நிரல்	மூன்றும் நிரல்	நான்காம் நிரல்	ஐந்தாம் நிரல்
தாரம்	குரல்	துத்தம்	உழை	இளி
குரல்	துத்தம்	உழை	இளி	தாரம்
துத்தம்	உழை	இளி	தாரம்	குரல்
உழை	இளி	தாரம்	குரல்	துத்தம்
இளி	தாரம்	குரல்	துத்தம்	உழை

மேற் குறிக்கப்பட்டன வாகிய ஐந் திசைகள் ஒவ்வொன்றும் ஒன்றிலிருந் தொன்று பிறப்ப தாகும். அம் முறையில் இவ் வைந் திசைக ளானவை, தார விசையிலிருந்து உழையிசையும், உழை யிசையிலிருந்து குர லிசையும், குர லிசையிலிருந்து இளி யிசையும், இளி யிசையி லிருந்து துத்த விசையுமாகப் பிறந்து நின்றன. இவ்வாறு பிறந்த விசையைப் பழந் தமிழர் கிளை யெனக் கூறினர். இவ் வகையில் நின்ற விசைகளைந்தையும் பிறந்த விசைக ளைந்தையும் தனித் தெழுதிக் காண்பாம்.

ஐந் திசைகள்

நின்ற விசைகள்	பிறந்த விசைகள்
க. தாரம்	க. உழை
உ. குரல்	உ. இளி
ந. துத்தம்	ந. தாரம்
ச. உழை	ச. குரல்
ரு. இளி	ரு. துத்தம்

இங்கு நாம் காண வேண்டுவது, இவ் வைந் திசைகளினுள் முத லிசை யாகிய தாரம் நின்ற விசைகளில் முதன்மையாக நிற்க, அதற்கு மூன்றா மிசை யாகிய துத்தம் பிறந்த விசைகளில் கடையில் நிற்பதையும், அத் துத்தத்திற் பிறந்த இசை முத லிசை யாகிய தார மாவதையுமே யாம். அஃதோடன்றி நின்ற விசை ஒவ்வொன்றினுக்கும் பிறந்த விசைகள் நான்காம் நான்கா மிசையாக நிற்றலையுங் காண்டல் கூடும்.

இவ்வாறு பிறந்த விசை யைந்தினையும் முறையே நின்ற நிரல் போன்று ஒவ்வோரிசையை முதலாகக் கொண்டு ஐ வகை நிரலாக எழுதுவாம். இதனை ஐந் திசைப் பிறப்பு நிரலென்பாம்.

ஐந் திசைப் பிறப்பு நிரல்

முதலாம் நிரல்	இரண்டாம் நிரல்	மூன்றாம் நிரல்	நான்காம் நிரல்	ஐந்தாம் நிரல்
உழை	இளி	தாரம்	குரல்	துத்தம்
இளி	தாரம்	குரல்	துத்தம்	உழை
தாரம்	குரல்	துத்தம்	உழை	இளி
குரல்	துத்தம்	உழை	இளி	தாரம்
துத்தம்	உழை	இளி	தாரம்	குரல்

இப் பிறப் பிசை நிரல்கள் யாவும் நின்ற நிர லொவ் வொன்றினுக்கும் நான்காம் நான்காம் நிரலாக வமைந்துள தைக் காணுவதோ டன்றி, இவ் வைந் திசை ஐ வகை நிரல் களினுள் ஒரு நிரலின் னின்ற முத லிசை யானது தன் னிரலுக் கடுத்த நிரலின் கடை யிசையாய் நிற்றலும் காணற் பாலதே. இவற்றினுள்ளும் பல் வேறு நுட்பக் கருத்துக்கள் உண்டு. பெருக வாராய்வாருக் கன்றிப் புலப்படா. இவ்வா றமைவுற்ற இசைகள் ஐந்தும் முதலில் குழற் றுளைகளினின் றெழுந்தவையே. குழ லோசைக் கேற்பவே யாழ்க் கருவி களில் நரம்புகள் கட்டப்பெற்றமையால், ஓசை நுட்பங்களை நன் குணர்ந்த பழந் தமிழர் இவ் வைந் திசைகளின் இடை வெளி நுட்பங்களை நன் கறிந்தே, பின்னரும் இரண் டிசை யினைச் சேர்த்து ஐந் திசையை ஏழிசை யாக்கினர். இச் செய்கையும் நம் நாட்டுப் பழங் காலச் செய்கையே யாம். இனி புதிய விரண் டிசைகள் எவ்வாறு சேர்க்கப்பட்டு, அவற்றிற் கெவ் வகையான பெய ரமைக்கப்பட்ட தென ஓரளவு அறிந்த வரை சிறிது கூறுவாம். ஐந் திசைகளின் இடைவெளியி னள வைப் பற்றிப் பேசுவதினும், எழுதுவதினும் பார்க்கக் கருவி களிற் காணுவதே சாலச் சிறப் புடைய தாகும். ஆயினும்

கட்டுரை வாசிப்போர் பலருக்கும் ஓரளவேனும் கருத்தை விளக்கவேண்டி, ஐந் திசைகளையும் அதன் இடைவெளி யளவையும் கோடிட்டுக் காட்டியே எழுதுவாம், அன்பர்கள் அறிந் துணர்வார்க ளாக.

ஐந் திசைகளும் இடைவெளி யளவும்.

தாரம் 1 2 3 குரல் 1 2 3 துத்தம் 1 2 3 4

உழை 1 2 3 இளி 1 2 3 4

மேற் குறித்த இடை யிசை வெளி யளவுக் கோடுகள் தாரம் குரல் நடுவே மூன்றும், குரல் துத்தம் நடுவே மூன்றும், உழை இளி நடுவே மூன்றுமாக நிற்க, துத்தம் உழை நடுவே நான்கும், இளிக் கப்பால் நான்கு மாக நிற்றலை நன்கு காணலாம். இதுவே பழைய காலத்தே இயற்கையி னமைந்த இசை யமைப் பாகும். பழந் தமிழர்களில் ஓசை வாயிலாக இசை யிடைவெளியை உணர்ந்த அறிஞர்களே, இவ் விசைகளின் இடை யளவு யாவையும் ஒத்த முறையி லமைக்கக் கருதி, துத்தத்திற்கும் உழைக்கு மிடையே நின்ற நான்காம் கோட்டிலும், இளிக் கப்பா லுள்ள நான்காம் கோட்டிலும் (ஓசை நுட்ப மறிந்து) இரண் டிசைகளைச் சேர்த்தனர், இதன் பின்னரே ஐந் திசை ஏ ழிசை யாயின. இவ் வமைப் பைக் கொண்டு நரம்புகளை முதன் முதலில் கட்டியது பேரி யாழில்தா னெனக் கூறலாம். முன்னர் தாரத்துட் பிறந்த உழையைக் கிளை யெனக் கூறியதால், உழைக்குக் கீழ் நிலையில் தோன்றிய புதிய முத லிசையைச் சிறிய கிளை யெனக் கூற வேண்டி, சிறுமை பற்றி வரும் இடைச்சொல் லாகிய கை யென்பதனைச் சேர்த்துக் கைக்கிளை யெனவும், இளிக் கப்பாற் றோன்றிய புதிய இரண்டா மிசையானது ஏழா மிசையாய் நின்று, மற்றைய இசைகளைத் தொகுதி போன்றதாகச் செய்த நீர்மையதாலும், இவ் வேழா மிசை பிறந்த பின்னரே இசைத் தொழில்களைப் பல் வேறு வகையா யமைக்க ஏது வான

தாலும், இன்றியமையாது விளையாட்டு எனு மிசைத் தொழிலுக்கு இப் புதிய இசையே சிறந்ததாலும், விளையாட்டு, கெடவால், தொடலை, பண்ணை போன்ற சொற்களின் பொருளுக் கேற்ப விளரி யெனும் பெயரையே இவ் வேழாமிசை யாகிய புதிய இரண்டா மிசைக்கு அளித்தனர் போலும். பின்னர் ஐங் கிசைப் பெயர்களோடு புதிய இரண்டிசைப் பெயர்களையும் சேர்த்து,

க. தாரம்

உ. குரல்

ங. துத்தம்

ச. கைக்கிளை

ரு. உழை

சா. இளி

எ. விளரி

எனப்பட்டது.

இனி, இவ் வேழிசையை, முன்னர் ஐங் கிசைகளை நான்கா மிசைப் பிறப்பு முறையாகக் கண்டது போல், நின்ற விசை பிறந்த விசை யெனத் தனித் தெழுதிக் காணுவாம்.

(ஏழிசை) நான்கா மிசைப் பிறப்பு முறை.

நின்ற விசை.	பிறந்த விசை.
தாரம்	(புதிய) கைக்கிளை
குரல்	உழை
துத்தம்	இளி
(புதிய) கைக்கிளை	(புதிய) விளரி
உழை	தாரம்
இளி	குரல்
(புதிய) விளரி	துத்தம்

இங்கு, (ஏழிசைகளில்) தாரத்திற்கு நான்கா மிசை கைக்கிளையும், குரலுக்கு நான்கா மிசை உழையும், துத்தத்திற்கு நான்கா மிசை இளியும், கைக்கிளைக்கு நான்கா மிசை விளரியும், உழைக்கு நான்கா மிசை தாரமும், இளிக்கு நான்கா மிசை குரலும், விளரிக்கு நான்கா மிசை துத்தமு மாக அமைந்திருத்தலையும் காணலாம். இவ்வா றமைந்த ஏழிசைகளையும், முன்ன ரைந் திசை யமைப்பின் நின்ற நிரலையும், பிறந்த நிரலையும் எழுதியது போன்றே, தனித் தனியே எழுதிக் காணுவாம்.

ஏழிசை நின்ற நிரல்.

முதலாம் நிரல்	இரண்டாம் நிரல்	மூன்றும் நிரல்	நான்காம் நிரல்	ஐந்தாம் நிரல்	ஆறும் நிரல்	ஏழாம் நிரல்
தாரம்	குரல்	துத்தம்	கைக்கிளை	உழை	இளி	விளரி
குரல்	துத்தம்	கைக்கிளை	உழை	இளி	விளரி	தாரம்
துத்தம்	கைக்கிளை	உழை	இளி	விளரி	தாரம்	குரல்
கைக்கிளை	உழை	இளி	விளரி	தாரம்	குரல்	துத்தம்
உழை	இளி	விளரி	தாரம்	குரல்	துத்தம்	கைக்கிளை
இளி	விளரி	தாரம்	குரல்	துத்தம்	கைக்கிளை	உழை
விளரி	தாரம்	குரல்	துத்தம்	கைக்கிளை	உழை	இளி

ஏழிசைப் (நான்கா மிசைப்) பிறப்பு நிரல்.

முதலாம் நிரல்	இரண்டாம் நிரல்	மூன்றும் நிரல்	நான்காம் நிரல்	ஐந்தாம் நிரல்	ஆறும் நிரல்	ஏழாம் நிரல்
கைக்கிளை	உழை	இளி	விளரி	தாரம்	குரல்	துத்தம்
உழை	இளி	விளரி	தாரம்	குரல்	துத்தம்	கைக்கிளை
இளி	விளரி	தாரம்	குரல்	துத்தம்	கைக்கிளை	உழை.
விளரி	தாரம்	குரல்	துத்தம்	கைக்கிளை	உழை	இளி
தாரம்	குரல்	துத்தம்	கைக்கிளை	உழை	இளி	விளரி
குரல்	துத்தம்	கைக்கிளை	உழை	இளி	விளரி	தாரம்
துத்தம்	கைக்கிளை	உழை	இளி	விளரி	தாரம்	குரல்

இக் நிரல்கள் பதினான்கிலும் பல்வேறு நுட்பங்கள் பொதிந்து கிடக்கின்றன. முன்னர் இயற்கையி லமைந்த முறையில் (ஐந்திசை) நான்கா மிசை யாகிய உழை, ஏழிசை யமைப்பில் ஐந்தா மிசையாய் நின்றதால், எழிசையில் நான்கா மிசைப் பிறப்பு முறை யன்றியும், ஐந்தா மிசைப் பிறப்பு முறை யென மற்றொரு பிறப்பு முறையும் கொள்ள நேரிட்டது. இவ் வகை யாலும் நிரல்கள் வேறுபடுந் தன்மைய வாம், ஐந்தா மிசைப் பிறப்பு முறையையும் தனியாகக் குறித்துக் காணுவாம்.

ஐந்தா மிசைப் பிறப்பு முறை.

நின்ற நிரல்.	பிறப்பு நிரல்.
தாரம்	உழை
குரல்	இளி
துத்தம்	விளரி
கைக்கிளை	தாரம்
உழை	குரல்
இளி	துத்தம்
விளரி	கைக்கிளை

இவ் வகைப் பிறப்பு முறை ஏழிசை யமைப்பில் ஐந்தா மிசைப் பிறப்பு முறையாம். பழைய ஐந் திசை யமைப்பில் ஐந்தா மிசைப் பிறப்பு முறை இல்லை; நான்கா மிசைப் பிறப்பு முறை யொன்றேதான். இவற்றை (ஏழிசையை) ஐந்தாம் ஐந்தா மிசை யாகக் காண,

—தாரம் — உழை — குரல் — இளி—துத்தம்—விளரி—கைக்கிளை — தாரம்

என வருவதையுங் காணுவது எளிதே யாம். இதனை யறிந்த பழந் தமிழ் நாட்டு இசைத் தமிழாளர், ஒரே செய்யுள் வடிவில் நமக்கு இக் கருத்தை விளக்கிக் காட்டி யுள்ளனர்.

அப் பாடல் வருமாறு:

தாரத்துட் டோன்றும் உழையுழை யுட்டோன்றும்
ஒருங் குரல்குரலி னுட்டோன்றிச்—சேருமிளி
உட்டோன்றுந் துத்தத்துட் டோன்றும் விளரியும்
கைக்கிளை தோன்றும் பிறப்பு.

இவ்வாறு ஐந்தா மிசைப் பிறப்பு முறை கூறும் பாடல் போன்றே, நான்கா மிசைப் பிறப்பு முறை கூறும் பாடலொன்றும் தமிழிலிருந்து இறந்திருக்கக் கூடும். இப் பிறப்பு முறைகள் யாவையும் அடுத்தடுத் தெழுதிக் காண வேண்டுவது மிக்க இன்றியமையாத தாகும். முன் போன்று ஒவ்வோரிசையை முதலாகக் கொண்டே குறிப்பாம்.

ஏழிசை நிரல்கள். ஐந்தா மிசைப் பிறப்பு முறை.

	நின்ற விசை நிரல்.	பிறந்த விசை நிரல்.
க.	தாரம்	உழை
	குரல்	இளி
	துத்தம்	விளரி
	கைக்கிளை	தாரம்
	உழை	குரல்
	இளி	துத்தம்
	விளரி	கைக்கிளை
உ.	குரல்	இளி
	துத்தம்	விளரி
	கைக்கிளை	தாரம்
	உழை	குரல்
	இளி	துத்தம்
	விளரி	கைக்கிளை
	தாரம்	உழை

௩.	துத்தம்	விளரி
	கைக்கிளை	தாரம்
	உழை	குரல்
	இளி	துத்தம்
	விளரி	கைக்கிளை
	தாரம்	உழை
	குரல்	இளி
௪.	கைக்கிளை	தாரம்
	உழை	குரல்
	இளி	துத்தம்
	விளரி	கைக்கிளை
	தாரம்	உழை
	குரல்	இளி
	துத்தம்	விளரி
௫.	உழை	குரல்
	இளி	துத்தம்
	விளரி	கைக்கிளை
	தாரம்	உழை
	குரல்	இளி
	துத்தம்	விளரி
	கைக்கிளை	தாரம்
௬.	இளி	துத்தம்
	விளரி	கைக்கிளை
	தாரம்	உழை
	குரல்	இளி
	துத்தம்	விளரி
	கைக்கிளை	தாரம்
	உழை	குரல்

எ. விளரி	கைக்கிளை
தாரம்	உழை
குரல்	இளி
துத்தம்	விளரி
கைக்கிளை	தாரம்
உழை	குரல்
இளி	துத்தம்

இந் நிரல்கள் யாவும் இசைக் கலைக்கே மிகமிக அடிப்படையான அமைப்பைக் கொண்டவைகளாய் நிற்கின்றன. இவ்வடிப்படை யமைப்பை நன்கு உணர்ந்தே, சிலப்பதிகார உரைகாரர்கள் இசைத் தமிழ் நுட்பம் பலவற்றை எழுதிவைத்தனர். நெடுங் காலமாக அடைபட்டுக்கிடந்த இசைத் தமிழ்க் கருவூலத்தைக் கண்டு திறந்து நாமெல்லாரும் மகிழும் வண்ணம் வழங்கிய பெருந்தகையார் ஒருவரே இந் நிரல் நுட்பங்களைத் தெளிவுபடுத்தியவ ராவர். இவை யாவும் இக் காலம் இசைப் புலவர்கள் பலராலும் நன் கறிந்து கொள்ளக் கூடியவையே. மேலும், சில நூற்றாண்டுகட்கு முன் தஞ்சையை யாண்ட நாயக்க மன்னர்கள் காலத்தியவரும், எழுபத்திரண்டு மேளகர்த்தா இராகங்களைக் கணித்தவருமான வேங்கடமகி எனும் பெருந்தகையார் தமிழர்கள் கொண்ட பழைய நான்கா மிசைப் பிறப்பு முறையின் கணித முறைப்படி மேளங்கள் கொண்டதாற் றான், ஷட் சுருதி ரிஷபத்தையும் ஷட் சுருதி தைவதத்தையும் கொள்ள வாய்ப்பு ஏற்பட்டதென அறியக் கிடக்கின்றது.

உள நூல்

வித்துவான் திரு. M. குஞ்சிதபாத தேசிகர்,
தமிழாசிரியர், உயர்நிலைப்பள்ளி, நன்னிலம்.

(முற்றொடர்ச்சி: துணர் 24, மலர் 5, பக்கம் 131.)

மனக் குற்றம்.

மனிதர்களிடத்துத் தோன்றுங் குற்றங்கள் பல. இவற்றைச் சங்க இலக்கியங்களும், ஐம் பெருங் காவியங் களும், பிற் காலத்திய நூல்களும், மூன்று பெரும் பிரிவுக ளாகப் பிரித்துக் கூறியுள்ளன. அவை, முறையே, மனத்திற் றோன்றுவன, வாக்கி லுதிப்பன, உடம்பிற் றோன்றுவன என்பன வாம். மனத்தில் தோன்றுங் குற்றமே மற்றைய இரண்டிற்கும் காரணம் என்று அந் நூல்கள் கூறும். இதற்கு இரண்டு உதாரணம் மாத்திரம் குறிக்கின்றேன்.

'கொலையே களவே காமத் தீவிழை
உலையா உடம்பிற் றோன்றுவ மூன்றும்
பொய்யே குறளை கடுஞ்சொல் பயனில்
சொல்லெனச் சொல்லிற் றோன்றுவ நான்கும்
[1]வெஃகல் [2]வெகுளல் [3]பொல்லாக் காட்சியென்
றுள்ளக் தன்னி லுருப்பன மூன்றமெனப்
பத்து வகையாற் பயன்றெரி புலவர்
இத்திறம் படரார்................'

என முக் குற்றத்தையுங் கூற வந்த மணிமேகலை யாசிரியர், முதலில் உடம்பிற் றோன்றுவனவற்றையும், அதன் பின் வாக்கிற் றோன்றுவனவற்றையுங் கூறி, இறுதியில் மனத் திற்றோன்றும் குற்றங்கள் மூன்றையுங் குறிப்பிட்டுள்ளார்.

மனக் குற்றமே மற்றைய குற்றங்களுக்குக் காரணம் என்பதும், இவற்றை விலக்கல் எளிதாகாது என்பதுங் குறிக்கவே ஈற்றில் வைத்தா ரென்க.

மனக் குற்றம் நீங்கினுல் மற்றவை தானே ஒழியும் என்று கூடக் கூருமல், மற்றைய குற்றங்கள் உண்டாகவே மாட்டா என்பர் மேலோர். தமிழ் மறை யருளிய வள்ளுவர் மனக் குற்றம் நீங்கலே அறம் என்பதனை உறுதியாக 'மனத்துக்கண் மாசில ஞதல் அனைத்தறன்' என்று உணர்த்துகின்ருர். இக் கருத்தை, மற்ருே ரிடத்தில், வெளிப்படையாக,

'காம வெகுளி மயக்க மிவைமூன்றின்
நாமங் கெடக்கெடு நோய்'

என்று விளக்கி யருளி யிருக்கின்ருர். 'காம வெகுளி மயக்க மிவைகடிந்து, ஏமம் பிடித்திருந் தேனுக் கெறி மணி' என்னுந் திருமந்திர உண்மையுங் கண்டு கொள்க.

மேற் கூறியவற்ருல் மன மாசு இவை என்பதும், வெஃகல், வெகுளல், பொல்லாக் காட்சி ஆகிய இவற்றுடன் செய்யும் அறம் அறம் ஆகாது என்பதும், மன மாசு நீங்கலே அறம் என்பதும், இவ் வறம் உண்டாயின் யாதொரு குற்றமும் உண்டாகாது என்பதும் போந்த பொருளாகக் கொள்க.

(தொடரும்)

தமிழ் எழுத்துக்களும் அடையாளங்களும்

வித்துவான் திரு. M. குஞ்சிதபாத தேசிகர்,
தமிழாசிரியர், உயர்நிலைப் பள்ளி, நன்னிலம்.

(முற்றொடர்ச்சி: துணர் உச, மலர் ௫, பக்கம் 154.)

I அ இ உ

II ஆ ஈ உ·

III ெ ஒ

IV அ ஆ இ ஈ உ (உ·) ஊ எ ஒ$_0$ (ஒ$_0$) (ஒெ) ஔ.

V தொல்காப்பியர் காலத்திற்கு முன் எ ஒ இரண்டுந்தா னிருந்தன. குறில் வேறு நெடில் வேறு வரி வடிவில் இல்லை. இடம் நோக்கி ஊகித் தறிய வேண்டிய நிலையில் இருந்தன.

I அ இ உ முதலில் உண்டாயிற்று.

II நெடில் ஒரு (0) சுழி சேர்த்து உண்டாக்கப்பெற்றது.

III எ ஒ உண்டாயிற்று

IV ஔ உண்டான விதம்

V தொல் காப்பியர் காலத்திற்கு முன் வரி வடிவில் எகர ஒகரங்களில் குறில் நெடில் வேற்றுமை யில்லா திருந்தன.

VI ‘மெய்யீ றெல்லாம் புள்ளியொடு நிலையல்’
என்றதைத் தழுவி
‘எகர ஒகரத் தியற்கையு மற்றே’
என்ற சூத்திரத்தால் தொல்காப்பியர் குறிலா யிருந்தால் மெய் எழுத்துக்கள் போல புள்ளி யொடு வரைய வேண்டுமெனக் கூறியுள்ளார். இதன்படி, அ ஆ இ ஈ உ உ· எ· எ ஒ· ஓ ஓ₀ என்று எழுத வேண்டுமென நினைக்க இட முண்டு (ஐ) ஐ என்பதால் ஐ என்ற எழுத்து வரக்கூடிய இடங்களிலே அ, இ இரண் டெழுத்துங் கூடிப் போலியாக வரும்,

அகர இகரம் ஐகார மாகும்
(எழுத்ததிகாரம், 54,)

(உ-ம்) அஇ வனம் (ஐவனம்)

என்று கூறி, மறுபடியும் அகரம் இகரம் சேர்ந்து ஐகாரத் திற்குப் போலியாக வருவதே யன்றி,

VII அய் என அகரத்திற்குப் பின்னர் யகர மெய் பெற் றும் வருதலு முண்டு. காரணம் யாதெனின், ஐ என்ற எழுத்தின் நீண்ட வுறுப்பிலே மெய் (யகரம்) பெறத் தோன்றும், (ஐ ஐ ஐ) ஆதலால் அய் வனம் ஐவனம் என வரும் எனக்கூறுவதால், ‘அ’ யகாமும் சேர்ந்த அடையாளமே ஐ என்ற என்ற எழுத்து எனக் கண்ணுக்குத் தெரிய வரி வடிவில் கொண்டுள்ளார் என்று விளங்குகிறது.

VI ஆகையால் தொல்காப்பியர் வேறுபாடு தோன்ற எ ஒ என்ற எழுத்துக்கள் மெய் போலப் புள்ளி பெற்றிருக்க வேண்டு மென்று வேறுபாடு செய்தனர்.

VII ஐ என்ற எழுத்து அகாமும் யகர மெய்யுஞ் சேர்ந்து வரி வடிவில் காணப்படும் எழுத்து என்பது.

'அகரத் திம்பர் யகரப் புள்ளியும்—ஐயென் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்' என்ற சூத்திரத்தின் உண்மைப் பொருள் உணர்த்துவனவற்றை ஆராயின், மேற்கூறிய உயிரெழுத்துக்களின் வடிவே யன்றி ஐகாரத்திற்கு வரி வடிவு கூறினர் எனத் தெளிக.

VIII 'உட்பெறு புள்ளி உருவா கும்மே' (14)
பகரத்தோடு மகரத்திடை வரி வடிவு வேற்றுமை செய்கின்றது.

மேற் சூத்திரத்தால் மேல் பெறுகின்ற புள்ளியே யல்லாமல் ப· என்ற எழுத்தின் உள்ளேயும் ஒரு புள்ளி பெறும்.

க·பி—கப்பி

ஆகவே, ப· ப· ம என முறையே மாறி இப்போதுள்ள வடிவைப் பெற்றிருக்கின்றது என விளங்குகின்றது.

ஆகவே, உயிர்மெய் எழுத்துக்களில் ஐ என்ற உயிர் ககரம் முதலியவற்றிற்குச் சொல்லும் போது, வரி வடிவில் (ஐ என்ற எழுத்தின் அடையாளம்) (ை கை கை) எனப் பிற்காலத்தில் திருத்தி யுள்ளது என்பதும் ஒருவாறு தெரிய வருகின்றது.

இந்த எழுத்துக்களை ஏட்டில் எழுதிவந்தார்கள். ஏட்டில் எழுதும் போது கண்ணை என்று இப்போது எழுதுகிற சொல்லில் உள்ள (ணை) கண்ணன்ன என்றும் கண்ணை என்றும் படிக்கக் கூடும் ஆகையால், அவ்வாறு ஐயம் தோன்றக் கூடிய (ண ல ள ன) நான்கிற்கு மட்டும் (ை) இந்த ஐ என்ற அடையாளம் வரியின்மேல் (ணை லை ளை னை) என்று வேருகப் பார்த்தவுடன் தெரிந்து கொள்ள வேண்டுமென பிற் காலத்தார் மாற்றி எழுதினரென்று கொள்க. இப்போதுதிருத்

VIII ம என்ற எழுத்து ம· என பகரத்தின் உள்ளே ஒரு புள்ளி பெறுதலே அதன் வரி வடிவம் என்பதாம்.

தப்பட்ட படி எழுத்துக்கள் முறை அ ஆ இ ஈ உ ஊ எ' எ ஐ ஒ' ஒ ஔ ம கை என்பன வாம்.

நெட்டெழுத்துக்களே வேறுபாடு அடைந்துள்ள காரணத்தை யறிந்த அறிஞர் பின்னர்,

குறில் எ நெடில் ஏ எனவும்,
குறில் ஒ நெடில் ஓ எனவும்
மாற்றியுள்ளார் என்க.

மேலே,

'இசைப்படு புள்ளின் எழால் போலச்
செவிப்புல னுவது ஒலியெழுத் தாகும்.'

என்பதில் 'இசைப்படு புள்ளின் எழால்' என்று உவமை கூறியதால், இசையைக் குறிக்கும் என்றும், அல்லது எழுத்தின் ஒலி வடிவைக் குறிக்கும் என்றும் கொள்ள இட முண்டாகும்.

பொருள் எவ்வாறு ஆயினும், தமிழ் இயல், இசை, நாடகம் மூன்றுஞ் சேர்ந்தே என்பதும், 'சங்கத் தமிழ் மூன்றும் தா' என்ற செய்யுட் பகுதியாலும், முத்தமிழ் என்ற வழக்காலும், இசையும் மொழியில் ஒரு கூறே யாம் என்பது தேற்றம்.

அவ்வாறாயின், இசைக்கும் எழுத்து இலக்கணங்களிலும் இலக்கியங்களிலும் இடம் பெற்றிருக்க வேண்டும். இந் நோக்குடன் ஆராயுங்கால், சிலப்பதிகாரத்திலே இசை யுண்டாகும் இயல்பினையும், பல பண்ணிற்கு இலக்கணங்களையும் கூறியுள்ளார்.

பவணந்தி முனிவர் இசை (சங்கீதம்), விளி (அழைத்தல்), பண்ட மாற்று (பண்ட மாற்றுதல்) முதலான இடங்

களில் எழுத்துக்கள் முன் சொன்ன அளவைக் கடந்து ஒலிக்கும் என்னும் பொருள் பட,

> 'ஆவியும் ஒற்றும் அளவிறந் திசைத்தலும்
> மேவும் இசைவிளி பண்டமாற்று ஆதியின்'

எனவும், தொல்காப்பியர்,

> 'அளபிறந் துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்
> உளவென மொழிப இசையொடு சிவணிய
> நரம்பின் மறைய என்மனார் புலவர்.'

என்றும், உரையாசிரியர் நச்சினார்க்கினியர் மேற் கூறிய சூத்திரம் பிறன் கோட் கூறல் என்னும் உத்தி பற்றி இசை நூற்கு வருவதோர் இலக்கணம் ஆமாறு கூறி, அவ் விலக்கணம் இந் நூற்குங் கொள்கின்றது எனவும் கூறுவதாலும், தமிழ் எழுத்துக்கள் அளவு கடந்து இசையில் வரும் எனத் தொல்காப்பியர் கூறியுள்ளார் என்று தெரிய வருகின்றது. செய்யுளைச் சாதாரணமாக வாசிக்கும் ஓசையை இது குறிக்க வில்லை என்பதை இச் சூத்திர உரையில் நச்சினார்க்கினியர் விரித் துரைப்பதால் உணர்க.

சூடாமணி நிகண்டில், ஏழிசைக்குந் தனித்தனிப் பிறப் பிடங்களாவன:

மிடறு—துத்தம் நா—கைக்கிளை அண்ணம்—உழை
தலை—இளி நெற்றி—விளரி நெஞ்சு—தாரம்
நாசி—குரல்.

ஏழிசைக்கும் மாத்திரை :

குரல் 4 துத்தம் 4 கைக்கிளை 3 உழை 2
இளி 4 விளரி 3 தாரம் 2

ஏழிசை எழுத்துக்கள், முறையே, ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ எனவும், ச, ரி, க, ம, ப, த, நி, ச என்ற எழுத்துக் களுக்குப் பதிலாக இந் நெட்டெழுத்துக்களேழுமே இசை யில் வழங்கி வந்தன. சூடாமணி நிகண்டில் ஒலி பற்றிய தொகுதியில் 36, 37, பாட்டுக்களால் தெரிய வருகின்றன.

பல உயர்வான இசைக் கருவிகளையும், பிற நாட்டினர் இன்றும் கண்டறியாத இசையையும் உணர்ந்த நுட்ப அறிஞர் இசைக்குப் பிற மொழியில் கடன் வாங்கியா அறிந்திருக்க முடியும் என்பதை ஆராய்ந்தாலே உண்மை தெரியவரும்.



எழுத்தைக் கூறும்போது ஏற்படும் உதட்டின் இயற்கை வடிவங்களையே வரிவடிவில் அமைத்துள்ளார் என்ற உண்மை மேற் காட்டிய அடையாளங்களால் புலனாகும்.

இவ்வாறே மற்றைய எழுத்துக்களுக்குங் காரணங் கண்டு தெளிக.

IV உ. சுழியுங் கோடுஞ் சேர்ந்தவையே பெரும்பாலன. சுழி அல்லது கோடு மாத்திரம் உடையன இரண்டொன்றேயாம். ஆகையால், முதலில் (உ) இதை எழுதத் தெரிந்து கொண்டால், மற்றவையை எழுத லாகும் என்பதற்காக இதனை முதன் முதலில் எழுதி வந்தனர், முதன் முதலில் எழுதுகின்ற வடிவாக இருத்தலினால் பிள்ளையார் சுழி என்றனர் போலும். இதனை K. A. P. விசுவநாதம் அவர்களும் கூறியதாக நினைவு.

மேற் கூறிய நான்கின் உண்மைக் காரணம் வேறு இருப்பின் கண்டோர் உணர்த்த விரும்புகின்றேன்.

1	உயிர், வல்லினம்	நெஞ்சு
2	மெல்லினம்	மூக்கு
3	இடையினம்	கழுத்து
4	ஆய்தம்	தலை

வலிமைக்கு நெஞ்சுரமும், மெலிமைக்கு மூக்கும், இடைமைக்குக் (நடுத்தரமானது) கழுத்தும், நுட்பமும் உறுதியுமுடைய இன்றியமையாத ஆய்தத்திற்குத் தலையும் இடமாகும். இயற்கைத் தன்மையை ஒப்பிட்டுணர்க. இதுகாறும் கூறியவற்றால், முதன் முதலில் சித்திரம், அறிகுறி முதலியவற்றால் உணர்ந்த பின்னர் ஒலி உண்டாக்கி, அதற்கு வரி வடிவு எழுத்துக்கள் அமைத்துள்ளார் என்பதும், ஒலி வடிவில் ஆதி முதல் மாறுதல் இல்லை, வரி வடிவிலேதான் பல மாறுதல் ஏற்பட்டதென்பதும், தொல்காப்பியர் காலத்தில் வரி வடிவு கூறப்பட்டவை இவை என்பதும், தொல்காப்பியர் காலத்திற்கு முன்னர் எழுத்துக்கள் இருந்த நிலை இவை என்பதும், முதன் முதலில் அ, இ, உ உண்டாயிற்று என்பதும், சுழி (0) சேர்ந்த பின் நெடில் உண்டாயிற்று என்பதும், அகரம் இகரம் சேர்ந்தே எகரம் உண்டாயிற்று என்பதும், அகரம் உகரம் சேர்ந்தே ஒகரம் உண்டாயிற்று என்பதும், எ, ஒ, குறில், நெடில் வேறுபாடில்லாமல் வரி வடிவில் வரைந்து வந்தனர் என்பதும், தொல்காப்பியர் வரி வடிவில் எ, ஏ, ஒ, ஓ வேறுபாடு செய்தனர் என்பதும், தொல்காப்பியர் காலத்திற்குப் பிற்பட்டவர்களால் அகர, இகர, உகரங்களில் நெடில் வேறுபடுவதைப் போல, எகர, ஒகரங்களிலும் (எ, ஒ) வேறுபாடு செய்துள்ளார் என்பதும், சார்பெழுத்தின் தன்மை தொல்காப்பியர் கருத்து உரையாசிரியர் கூறியவற்றிற்கு மாறுபட்டதாகும் என்பதும், தொல்காப்பியம், எழுத்ததிகார முகவுரையில் மாணிக்க நாயக்கரின் கருத்தைப் பின்பற்றி எழுதியுள்ளதை ஒத்துப் பார்த்தால் தெளிவாகும் என்பதும், ஐகாரத்தின் தன்மை இது என்பதும், இசைக்கும் தமிழில் எழுத்துக்கள் உண்டு என்பதும், இலக்

கண இலக்கியங்களின் மேற்கோளே யன்றி அவ் வெழுத்துக்கள் இவை யென்பதும், முதன் முதலில் உண்டான அகர, இகர, உகரங்கள் ஒலி பிறக்கும் உதட்டின் இயற்கையை ஒட்டி எழுத்துக்களின் வரி வடிவை முன்னோர்கள் அமைத்துள்ளார்கள் என்பதும், வரி வடிவிற்கு முன் ஒலி வடிவும், ஒலி வடிவிற்கு முன் பல அறிகுறிகளும் இருந்திருக்க வேண்டும் என்பதும் கூறிய பொருள்களாகக் கொள்க.

நூல் மதிப்பு.

சோழர் கோயிற் பணிகள்: மூன்றும் பதிப்பு, 1948.

திரு ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை, பி. ஏ., பி எல்.

கிடைக்குமிடம் :— ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், பவழக்காரத் தெரு, சென்னை 1. ரூ 1–12–0

ஓர் அரிய ஆராய்ச்சி நூல். சரித்திரக் குறிப்புக்களுடனும் பளபளப்பான படங்களுடனும், ஓவியங்களுடனும், தக்க இணைப்புக்களுடனும் கூடியது

ஆசிரியர், தஞ்சாவூர்ப் பெருவுடையார் கோயிற் செயலாளரா யிருந்து ஆராய்ந்து எழுதியது. தமிழ் நாட்டு முடியுடை மூவேந்தர்களுள் சோழர்களது பெருமையையும் அவர்களுடைய திருப்பணிகளையும் பற்றி விரிவாக எழுதியிருப்பது. செவியாரல், நூல்வழக்கு, கல்வெட்டு முதலியவற்றா லறிந்த பல பொருள்களையும் ஒழுங்கு படுத்தி எழுதியிருப்பது, இது தமிழருக்குப் பெரிதும் பயன் தருவது.

ஆதி பகவன்

திரு. கு. இராமணன், B. A., சென்னை.

'அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு.'

இப் பா, திருக்குறள், அறத்துப்பால், கடவுள் வாழ்த்தில் வரும் முதற் பா. எழுத்துக்க ளெல்லாம் அகரத்தை முதலாக உடையனபோல, இவ் வுலகமும் ஆதி பகவனை முதலாக உடைத்து என்னும் கருத்தினை யுடையது. இதில் வரும் 'ஆதி பகவன்' என்னும் சொற்கட்குப் பலரும் பலவாறு தம் தம் விருப்பப்படி பொருள் கூறுகின்றனர், சிலர் இதற்கு ஒரு கதையும் கட்டுவித்து, வழக்கில் கொண்டு வருவா ராயினர். இற்றைக் கால ஆராய்ச்சி இக் கட்டுக் கதைகட்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்து விட்டது மகிழ்தற் குரியதே. பரிமேலழகர், "இது தலைமைபற்றி வந்த எடுத்துக்காட் டுவமை; அகரத்திற்குத் தலைமை விகாரத்தா னன்றி நாத மாத்திரை யாகிய இயல்பாற் பிறத்தலானும், ஆதி பகவற்குத் தலைமை செயற்கை யுணர்வா னன்றி இயற்கை யுணர் வான் முற்று முணர்தலானுங் கொள்க. தமி ழெழுத்திற்கே யன்றி வட வெழுத்திற்கும் முதலாதல் நோக்கி, 'எழுத்தெல்லா' மென்றார். ஆதி பகவன் என்னு மிரு பெயரொட்டுப் பண்புத் தொகை வட நூன் முடிபு. உல கென்றது ஈண் டுயிர்கண் மேனின்றது. காணப்பட்ட உலகத்தாற் காணப்படாத கடவுட்கு உண்மை கூற வேண்டுதலின், 'ஆதி பகவன் முதற்றே' யென உலகின்மேல் வைத்துக் கூறினார்; கூறினாரேனும், உலகிற்கு முதல் ஆதி பகவன் என்பது கருத்தாகக் கொள்க. ஏகாரம் தேற்றத்தின்கண் வந்தது. இப் பாட்டான் முதற் கடவுள துண்மை கூறப்பட்டது." என்று இப் பாவிற்கு விளக்க வுரை வரைகின்றார்.

இவ் வுரையின்கண் யாண்டும் 'ஆதி பகவன்' எனும் சொற்றொடர் யாரைக் குறிக்கின்றது என்று விளக்கினார் இல்லை. ஆதி பகவன் என்பது முதற் கடவுளைக் குறிப்பதாகவும்,

அது இவ் வுலகிற்கு முதலாக இருப்பது என்று மட்டுமே கூறியிருத்தல் காணலாம். எம் மதத்தவரின் கடவுளர்க்கும் ஆதி பகவன் என்ற பெயர் இருப்பதாகத் தெரிய வில்லை. ஆதலின், சமயங்கள் எல்லாம் தமிழர் வாழ்வில் புகுந்து, அவர்கள் வாழ்வைக் குலைக்காத பண்டைக் காலத்தே தமிழர் தம் வழிபடு முதற் கடவுளை 'ஆதி பகவன்' எனும் அரும் பெயரால் அழைத்தனர் எனக் கோடல் பொருந்தும். ஆயின், வடவரும், குடவரும் இத் தண் டமிழ் நாட்டில் நுழையாத அம் மிகப் பண்டைக் காலத்தே, தமிழர் எக் கடவுளைப் போற்றினர் என்பது எண்ணற் பாலது. வரலாறு எழுதாத அப் பழங் காலத்தே, 'கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே தோன்றிய முது குடிக்கும் மூத்த குடியான அத் தமிழ்க் குடியினர், இந் நில வுலகின் தாய் மீனை ஞாயிற்றினை வணங்கி வந்தனர் என்பது நூல்கள் வாயிலாக நாம் அறியு முண்மை. இதற்குச் சிலப்பதிகாரம் சான்று பகர் கின்றது. இன்றும் நம் தமிழர் தம் புத் தாண்டுத் துவக்கத்தில் பொங்கலன்று செய்யும் விழா நடை முறைப் பழக்கத்திலிருக் கின்றது. ஆகவே வள்ளுவர் வணங்கிய அந்த ஆதி பகவன் ஞாயிறே எனக் கொள்ளலாம்.

திராவிடக் குழு மொழிகளில் ஒன்றாய தெலுங்கிலும் கிழமைகளில் முதலாவது நாளை 'ஆதிவாரம்' என்றே அழைக்கின்றனர். ஆதி எனும் சொற்கு முதல் என்று மட்டும் பொருள் கொண்டு, ஆதி வாரத்தை முதல் நாள் எனின், பிற நாட்களின் பெயர்கள் இதற்கு ஏலாமையும் காண்க. திங்கட் கிழமை சோம வாரம் எனப்பட்டது. அது போலவே, பிற கிழமைகளும் கோள் களின் பெயருக்கேற்ப வர, ஞாயிற்றுக் கிழமையின் பெயர் மட்டும் மாறியது எனக் கோடல் பொருந்தாது. ஆதலின், ஆதி எனும் சொற்கு ஞாயிறு எனும் பொருளே சால் புடைத்து. மேலும், நிலம் முதலாய கோள்கள் பரிதியுடன் தொடர் புடையன. ஆதலின், இவ் வுலகத்திற்கும், அதன் உயிர் வாழ் பொருள் கட்கும், பிற யாவற்றிற்குமே பகலவன்தான் முதல்வன் எனும் வான நூல் அறிவியற் கருத்து விளங்க வள்ளுவப் பெருந்தகையார் ஞாயிறு வணக்கத்தை முதற் பாவில் வலியுறுத்துவா ராயினர்.

முதல் மனிதன் இந்நாட்டில்தான் தோன்றினன் என்பர் ஆராய்ச்சியாளர். அவ்வாதித் தமிழ் மக்கள் தம்மினும் ஆற்றல் மிக்க இயற்கைப் பொருட்களை வணங்கினர். இயற்கைப் பொருட்கள் அனைத்திற்கும் தோற்றுவாயாகக், காரணனாக இருக்கும் ஞாயிற்றினை அவர்கள் ஆதி என அழைத்தனர் என்பதில் வியப்பொன்றுமில்லை. மேலும், அக்காலத்தே, இன்று நம் நாட்டில் காணப்படும் எச்சமயமும் தோன்றவில்லை; தோன்றியிருக்க முடியாதன்றோ? சமயம் எனும் சொல்லே பொழுது என்னும் பொருளையுடைத்து, ஒருகாலத்தில் ஏற்பட்டுப் பிறிதோர் காலத்து அழியக் கூடிய தன்மை, எச்சமயத்திற்கும் உண்டு. ஆனால், ஆதித் தமிழனின் சமயம் இயற்கையின்பாற் பட்டது. இன்று நாட்டில் நிலவும், சைவ, வைணவ, பௌத்த, சமண சமயங்கள் தோன்றாத அக்காலத்துத் தமிழன், இச்சமயத்தவரின் வழிபடு தெய்வங்களை வணங்கியிருக்கமுடியாது. வள்ளுவரும் அக் கடவுளரைப் பின்பற்றியவரல்லர் எனக் கொள்ளலாம்.

சைவர்கள் வள்ளுவரைச் சைவர் என்று கூறுகின்றனர்.

‘கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
தாளை வணங்காத் தலை’.

என்னும் சொல்லை ஆதாரமாகக் காட்டுகின்றனர். ‘எண் குணங்களாவன, தன்வயத்தனாதல், தூய வுடம்பினனாதல், இயற்கை யுணர்வினனாதல், முற்று முணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை என விவை. இவ்வாறு சைவாகமத்துக் கூறப்பட்டது’ எனப் பரிமேலழகர் கூறுகின்றனர். அப்பர், ‘எட்டுவான் குணத்து ஈசன்’ என்று கூறியதையும், சுந்தரர், ‘இறைவனை, மறையவனை, எண்குணத்தினானை’ என்று கூறியதையும் எடுத்துக்காட்டுகளாக்கி வள்ளுவரைச் சைவராக்குகின்றனர் சிலர். ஆனால், வள்ளுவரோ, தம் முதலதிகாரத்திலேயே, ஆதி பகவனுக்குரிய எண் குணங்களையும் கூறிப் போந்துள்ளார்.

அவை யாவன, ஆதிபகவன், வாலறிவன், மலர்மிசை ஏகினான், வேண்டுதல் வேண்டாமையிலான், இறைவன், பொறி வாயிலைந் தவித்தான், தனக் குவமையில்லாதான், அறவாழி அந்தணன் ஆகிய எட்டுப் பெயர்களுக்கும் உரிய பண்புகளாம். அக் காலத் தமிழர் தம் வழிபடு பொருளாய கதிரவனுக்கு மேற் கூறிய எட்டுப் பெயர்கட்கு முரிய குணங்களைக் கற்பித்தனர் எனக் கோடல் பெரிதும் பொருத்தமாகவுள்ளது. இதை

விடுத்து, வலிந்து, சைவாகமத்தை இழுத்துவைத்து, வள்ளுவரைத் தம் சமயத்தவர் என முடிவுகட்டல் சரியன்று.

வைணவர், 'தாமரைக் கண்ணு னுலகு' எனும் சொற்றொடரைக் கொண்டும், இன்னும் சில குறிப்புகளைக் கொண்டும், வள்ளுவரை வைணவர் எனக் கொள்ளுகின்றனர். ஞாயிறு தாமரையின் கணவனாகப் பல இடங்களில் உவமிக்கப்பட்டிருத்தல் ஈண்டு கருதற்பாற்று. தாமரையின் காதலன் போன்றவன், கண் போன்றவன், அது மலர்தற்கு ஆதி காரணன் என்னும் பொருட்களில் வள்ளுவர் இத்தொடரைக் கையாண்டிருக்கலாம் ஆதலின், வலிதின் கொண்ட பொருள் பற்றி வள்ளுவரை வைணவர் எனல் தமிழர் வழக்கிற்கே புறம் பானது என விடுக்க.

'மலர்மிசை ஏகினான்' எனும் சொற்றொடரைக் கொண்டு சமணர்களும், அன்பு, உயிர்கட் கிரங்கல், கொல்லாமை, முதலிய உயர் பண்புகள்பற்றி வள்ளுவர் பேசியிருத்தலால், புத்தர்களும் வள்ளுவரைத் தம் சமயத்தவர் என்று போற்றுகின்றனர். இதுவும் முற் கூறியதைப் போலவே, தகாத கருத்தே யாகும். 'மலர் மிசை ஏகினான்' என்ற விடத்தும், ஞாயிறையே வள்ளுவர் குறிக்கின்றார். புத்த சமயக் கருத்துக்கள் அனைத்தும், ஆரிய மதக் கருத்துக்கு மாறாக, எதிர்ப்பாகத் தோன்றியவை. ஆரியரையும், அவர்கள்தம் மதம், கலை, வாழ்க்கை முறை முதலியவற்றையும், வள்ளுவர் பல இடங்களில் கண்டித்துத் தமிழரின் திறம்மிக்க ஒழுக்க நூலை யாத்துள்ளார். ஆரிய மதத்திற்கு எதிரான புத்த மதக் கருத்துக்களும், தமிழர் வாழ்க்கை நெறியும் ஒத்திருத்தல் இயல்பே! இது கொண்டு அவரைச் சமணர் என்றோ, பௌத்தர் என்றோ கூறல் சற்றும் பொருந்தாது.

ஆதலின், வள்ளுவர் எச் சமயச் சார்பும் அற்றவர் என்பதோடு, தமிழர் அனைவருமே, சமயங்கட்குப் புறம்பானவர்கள். எனினும், சமூக வாழ்க்கை முறையில் மிகத் தேர்ச்சி பெற்ற நாகரீகச் சின்னங்கள் என மிக்க தைரியத்தோடு கூறலாம். அப்படிப்பட்ட தமிழரின் தனிப் பிரதிநிதி யான வள்ளுவர் கோமான் 'ஆதிபகவனை' வணங்குமிடத்து எச் சமயச் சார்பும் இன்றி, தமிழரின் வழக்கம் பற்றிவந்த ஞாயிறு வாழ்த்தையே முதலிற் கூறி. நூல் துவங்குகின்றார் என்று கொள்ளுதலே உண்மையும், முறைமையும், சால்பும் உடைத்து.

தமிழ் எண்களைச் சார்ந்த சில கருத்துக்கள்.

திரு. கோ. தியாகராசன், C. M. V. C., தஞ்சை.

'ஆயிரம்' என்னும் எண்ணின் பெயர் தவிர மற்ற எண்களின் பெயர்கள் சுட்டு உகரத்தில் முடிவன (Indicative 'உ' (எ. கா.) ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு முதலியன. தொள்ளாயிரம், ஆயிரத்தின் வழி வந்ததால், இவ் விதியிலிருந்து விலக்கப்பட்டது.

எண்கள் யாதா மொன்றைக் குறிப்பிட்டால்தான் பொருட் பய னுண்டு. 'எட்டு' என்று சொல்லின் அச் சொல் யாதொன்றையும் குறிக்காததால் ஏவல் வினை யெனக் கொள்ளப்படும். ஆனால் எட்டு மாம்பழமென்றால், மாம்பழங்கள் இத்தனை எனப் பொருள் தரும். ஆகையால் எண்களின் பெயர்கள் சுட்டு உகரத்தில் முடிவது ஒப்பதே. 'சூன்னம்' வடமொழிப் பெயர். தமிழில் யாதொன்றை யும் குறிக்காததற்குப் பெயரு மில்லை, குறியுமில்லை.

"The figure 0, called nought, cipher or zero, has no intrinsic value, but is used to fill up a vacant place, and thus gives local value to another digit".

"Cipher & zero are both derived from the same Arabic word, signifying vacant".

ஒன்றே பல வாகும்; ஒன் றில்லையேல் பலவு மில்லை. எட்டு மாம்பழங்க ளெனில் எட்டு ஒரு மாம்பழங்கள் உள்ளன என்பது பொருள். யாவும் தன்னிடத்தில் ஒன்றி யுள்ளதால் 'ஒன்று' எனப் பெயர் பெற்றதோ? 'The figure 1 is often called unity' பத்து, நூறு, ஆயிரம். என்பன வற்றிற்குத் தமிழில் தனிக் குறிக ளுள்ளன. எனவே,

ஆங்கிலத்தைப் போல ஒன்றிற்குப் பின் சுன்னங்கள் இணைத்து எழுதவேண்டியதில்லை.

ஆயிரத்திற்கு மேல்பட்டது நூறாயிரம். ஆங்கிலத்திலும் Hundred Thousand என்பது பெயர். இதற்கு மேல் "ஆயிரம் ஆயிரம்" என்பது தமிழ்ப் பெயர். ஆங்கிலத்திலும் Million என்பதற்கு ஆயிரம், ஆயிரம் என்பதே பொருள். இலத்தினில் 'Milli' என்றால் ஆயிரம் எனப் பொருள். 'Million' என்னும் சொல் 'Milli' என்னும் சொல்லின் வழிப் பிறந்தது.

ஆயிரம் ஆயிரத்தைப் பத்தினால் பெருக்கி வந்த தொகைக்கு 'கோடி' என்றுப் பெயர். எனவே, எண்களைத் தமிழில் எழுதுவது பின்வருமாறு :—

1 × 10 = பத்து	குறி—௰	=		10
10 × 10 = நூறு	,, —௱	=		100
100 × 10 = ஆயிரம்	,, —௲	=		1000
1000 × 10 = பதினாயிரம்	,, —௰௲	=		10000
10000 × 10 = நூறாயிரம்	,, —௱௲	=		100000
100000 × 10 = ஆயிரம் ஆயிரம்	,, ௲௲	=	million	1000000
1000000 × 10 = கோடி	,, கோடி	=	ten-million	10000000

எனவே, 'ஆயிரம், ஆயிரம்' மக்கள்கள் கூடியிருந்தாரென்றால், பல ஆயிரம் எனப் பொருள் படாது, ஒரு மில்லியன் எனப் பொருள் படும். இது போலவே, கோடி கோடி அல்லது கோடா கோடிப் பொருள் உடையவனென்றால், பல கோடி எனப் பொருள் படாது, ஒரு நூறு டிறில்லியன் 'One hundred trillions' எனப் பொருள் படும். இந்த எண்ணிக்கையைக் குறிக்க ஒன்றிற்குப் பின் 14 சுன்னங்கள் இணைக்கவேண்டும்.

இவ் வகையாக ஒவ்வொன்றும் பத்தினால் பெருக்கப்பட்டு வெவ்வேறு பெயர்கள் ஏற்றன.

தமிழ்க் குறிகள் சில வகையில் உரோமன் குறிகள் போன்றன :—

உரோமன் குறிகள் பின் வருமாறு :—

1 = I
2 = II
3 = III
4 = IV ஐந்தில் ஒன்று குறைந்தது. பழைய கடியாரங்களில் IIII எனவும் குறிக்கப்படும்.
5 = V
6 = VI
7 = VII
8 = VIII
9 = IX பத்தில் ஒன்று குறைந்தது. பத்தில் ஒன்று குறைந்ததெனக் காட்டவோ 'ஒன்பது' என்றும் பெயர் தமிழில் வந்தது?
10 = X இக் குறியில் 1-க்குப் பின் சுன்னம் சேர்க்கவில்லை.

எனவே, சுன்னம் என்பதும், அதற்குக் குறியும் ரோமனில் இல்லை.

ஒன்றன்பின் ஒன்ருய் அமைக்கப்படும் எண்களுக்கு 'டிஜிட்ஸ்' (digits) என்று பெயர். 'டிஜிட்ஸ்' என்ருல் விரல்கள் என்று பொருள். ஆகவே 1, 2, 3 இவைகள் 1, 2, 3 விரல்களை நீட்டியது போல் அமைந்தன.

நான்கைக் குறிக்க நான்கு கோடுகள் போடலாம்; அல்லது 5-இல் ஒன்று குறைந்ததெனக் காட்ட 5-இன் குறிக்கு (V) முன் ஒரு கோட்டை (I) அமைத்து ஐந்தில் ஒன்று குறைந்ததெனவும் காட்டலாம்.

ஐந்தென்பதின் குறி V, பெருவிரலையும் சுட்டுவிரலையும் நீட்டுவதால் உண்டாகுங்குறி, ஐந்து பத்தில் பாதி

யென்பதையும் குறிக்கும். பத்தின்குறி X. இக்குறியில் பாதி V.

பத்தென்பதின் X குறி, பெருவிரல்களைப் பின்னுவதால் உண்டாவது

ஐம்பதின் குறி (L), நூற்றுக் குறியில் '⌊' பாதி. நூற்றின் குறி C=Centum (நூறு) என்னும் சொல்லின் எழுத்து.

ஐந்நூறு என்பதின் குறி D, Demi என்னும் சொல்லின் முதல் எழுத்து. Demi எனில் 'பாதி' எனப் பொருள்.

ஆயிரம் என்பதின் குறி M, Mille என்னும் சொல்லின் முதல் எழுத்து. Mille எனில் ஆயிரம் எனப் பொருள்.

எனவே, ஒன்பதைக் குறிக்க IX எனவும், தொண்ணூறைக் குறிக்க XC எனவும், தொள்ளாயிரத்தைக் குறிக்க CM எனவும் எழுதி, முறையே, பத்தில் ஒன்றும், நூற்றில் பத்தும், ஆயிரத்தில் நூறும் கழிந்ததெனக் காட்டப்படுகிறது. தமிழிலுள்ள ஒன்பது, தொண்ணூறு தொள்ளாயிரம் முறையே ஒன்றும், பத்தும், நூறும், குறைந்தன என்பதைக் காட்டும் சொற்களா ?

தமிழிலும், உரோமனிலும் குறிகளைக் கொண்ட எண்கள் :

தமிழ்	உரோமன்
௰=பத்து	X
௱=நூறு	C
௲=ஆயிரம்	M
௨௱௮௰௬=286	CCLXXXVI=286
௲௮௱௯௰௩=1893	MDCCCXCIII=1893

எனவே, தமிழ்க் குறிகளால் கடைக் கணக்கு எழுதுவது மிக்க இடைஞ்சல் தரும். தற்காலம் பயன் படுத்தப்படும் அராபிக் குறிகளே மிகச் சிறந்தன.

தற்காலம் பயன்படுத்தப்படும் குறிகளின் பிறப்பு.

ஆராய்ச்சியாளர், தற்காலம் வழங்கும் குறிகள் அராபிக் குறிகளெனவும், அவை தங்கள் அமைப்பிலுள்ள

கோணங்களால் எண்களைக் குறிக்குமெனவும் கூறுகிறார்கள்.



= 1 — ஒரு கோணமுள்ளது.

= 2 — இரண்டு ,,

= 3 — மூன்று ,,

= 4 — நான்கு ,,

= 5 — ஐந்து ,,

= 6 — ஆறுமுகம் ,,

= 7 — ஏழு ,,

= 8 — எட்டு ,,

= 9 — ஒன்பது ,,

கோணமில்லாதது ○ சுன்னம்

சில ஆராய்ச்சியாளர் இந்தியாவில் கி. மு. 300 ஆண்டிற்கு முன் எண்களின் குறிகள் தங்கள் அமைப்பிலுள்ள கோடுகளால் எண்களைக் குறித்தனரென்கிறார்—

1=1; = =2; ≡ =3; + =4;  = 5



அராபிக் குறிகளையும், இந்தியக்குறிகளையும் ஒப்பிட்டால், அவைகள் ஒருமைப் பட்டனவாகத் தோன்றுகின்றன.

சீனத்தில் 1= —, 2= 二; 3= 三; 4= ×; 5= 

(சீனத்தில் சுன்னம் கிடையாது) எனவே இந்தக் குறிகளிலும் 1, 2, 3, 4, 5-க்குறிக்கும் குறிகளில் முறையே 1, 2, 3, 4, 5 கோடுகள் உள்ள மேலே காட்டிய நான்குவகைக் குறிகளையும் ஒப்பிட்டு நோக்குங்கால், ரோமர்கள் முதலில் விரல்களைக் குறியாகக் கொண்டும், இந்தியர்கள் சிறு துரும்புகளைக் குறியாகக் கொண்டும், சீனர்களும் சிறு துறும்பு அல்லது குச்சிகளைக் கொண்டும் எண்களைக் குறித்தனர் போலும்.

ரோமர்கள் கற்களின் உதவியால் கணக்கிட்டார்கள். (என்பாட்டியும் மொச்சைக் கொட்டைகளின் உதவியால் கணக்கிட்டதை சிறுவயதில் பார்த்திருக்கிறேன்) தற்காலத்திலும் எழுதப் படிக்கத் தெரியாது மோர், பால், எண்ணெய் முதலியன விற்பவர்கள் புள்ளியாலும் கோடுகளாலும் கணக்கிடுவதைப் பார்க்கலாம்) இந்த வழக்கத்திலிருந்து Calculate என்னும் சொல் பிறந்தது. Calculus என்ற சொல்லிற்கு கல் என்று பொருள். தமிழர்கள் ஒருகாலத்தில் புள்ளியிட்டுக் கணக்குப் பார்த்ததால் இப்பொழுதும் "புள்ளியிட்டுப் பார்" என்னும் உரை வழங்குகிறது. 'எண்' என்பதிலிருந்து, "எண்ணம்" "எண்ணி" எனும் சொற்கள் பிறந்தன "எண்ணித் துணிவது கருமம்" என்பதில் 'எண்ணி' என்பதற்கு Calculate என்பது பொருள்.

தமிழ்க்குறிகள் எவ்வாறமைந்தன என்பதைத் தக்க சான்றுகளுடன் எடுத்துக் காட்டும்படி ஆராய்ச்சியாளரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தமிழ் இசைச் சங்கம், சென்னை

ஆருவது தமிழ் இசை விழா 1948—49

அரண்மனைக்காரத் தெருவிலுள்ள செயின்ட்மேரி மண்டபத்தில்

தொடக்க விழா 23—12—48 மாலை 5-30 மணி

திறப்பாளர் : சென்னை முதல் அமைச்சர்

கனம் ஓமாந்தூர் பி. இராமசாமி ரெட்டியார் அவர்கள்

வரவேற்புக் கழகத் தலைவர்

திரு. சி. என். முத்துரங்க முதலியார் அவர்கள்

1

23—12—48 வியாழக்கிழமை மாலை 4-30 மணி

தமிழிசைக் கல்லூரி மாணவ, மாணவிகள் — பாட்டு

2

24—12—48 வெள்ளிக்கிழமை மாலை 5-30 மணி

எம். கே. தியாகராஜபாகவதர் —பாட்டு
மைசூர் டி. குருராஜப்பா —பிடில்
குத்தாலம் சிவவடிவேல் பிள்ளை —மிருதங்கம்
ஆலங்குடி ராமச்சந்திரன் —கடம்
மன்னார்குடி நடேச பிள்ளை —மூகர்சிங்

3

25—12—48 சனிக்கிழமை மாலை 5-30 மணி

ஜி. என். பாலசுப்பிரமணியம் —பாட்டு
மாயவரம் கோவிந்தராஜ பிள்ளை —பிடில்
பழனி எம். சுப்பிரமணிய பிள்ளை —மிருதங்கம்

4

26—12—48 ஞாயிற்றுக்கிழமை மாலை 5-30 மணி

எம். எஸ் சுப்புலட்சுமி —பாட்டு
மைசூர் டி. சௌடையா —பிடில்
கல்பாத்தி ராமநாதன் —மிருதங்கம்
ஆலங்குடி ராமச்சந்திரன் —கடம்

5

27—12—48 திங்கட்கிழமை மாலை 5-30 மணி

மதுரை மணி ஐயர் —பாட்டு
மாயவரம் கோவிந்தராஜ பிள்ளை —பிடில்
ராமநாதபுரம் வி. எஸ். முருகபூபதி —மிருதங்கம்

6

28—6—49 செவ்வாய்க்கிழமை மாலை 5-30 மணி

ஆனந்தி, ராதா—பரதநாட்டியம் & அபிநயம்
எம். எஸ். சுப்புலட்சுமி—பதம் பாடுவார்கள்

7

29—12—48 புதன்கிழமை மாலை 5-30 மணி

செம்பை வைத்திநாத பாகவதர் —பாட்டு
மைசூர் டி. சௌடையா —பிடில்
பழனி எம். சுப்பிரமணிய பிள்ளை —மிருதங்கம்
மஞ்சுநாதன் —கடம்

8

30—12—48 வியாழக்கிழமை மாலை 5-30 மணி

என். சி. வஸந்தகோகிலம் —பாட்டு
ஆர். எஸ். கோபாலகிருஷ்ணன் —பிடில்
பாலக்காடு கே. குஞ்சுமணி —மிருதங்கம்
ஆலங்குடி ராமச்சந்திரன் —கடம்

9

31—12—48 வெள்ளிக்கிழமை மாலை 5-30 மணி

கே. பி. சுந்தராம்பாள் —பாட்டு
ராமநாதபுரம் எம். என். கணேசன் —பிடில்
புதுக்கோட்டை தக்ஷிணாமூர்த்தி ஆச்சாரி —மிருதங்கம்
ஆறுமுகம் பிள்ளை —கஞ்சிரா
ஆலங்குடி ராமச்சந்திரன் —கடம்

10

1—1—49 சனிக்கிழமை மாலை 5—30 மணி

சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை —பாட்டு
பி. கே. விஸ்வநாத சர்மா —பிடில்
டி. கே. மூர்த்தி —மிருதங்கம்
மன்னார்குடி வைத்திலிங்கம் பிள்ளை —கொன்னக்கோல்

11

2—1—49 ஞாயற்றுக்கிழமை மாலை 5-30 மணி

எம். எம். தண்டபாணி தேசிகர் —பாட்டு
வி. கோவிந்தசாமி நாயக்கர் —பிடில்
மதராஸ் ஏ. கண்ணன் —மிருதங்கம்
டி. எஸ். வில்வாத்திரி ஐயர் —கடம்
மன்னார்குடி நடேச பிள்ளை —முகர்சிங்

கட்டணம்

சீசன் முதல் வகுப்பு	ரூ 30—0—0
இரண்டாம் வகுப்பு	,, 22—8—0

சீசன் டிக்கட்டுகள் தமிழ் இசைச் சங்கக் காரியாலயத்தில், [8/9, சிங்கண்ண நாயக்கன் தெரு, சென்னை-1] கிடைக்கும்.

ஆதரவாளர்கள் குறைந்த கட்டணத்தில் சீசன் டிக்கட்டுகள் சங்கக் காரியாலயத்தில் மட்டும் பெற்றுக்கொள்ளலாம்.

குழந்தைகளுக்கு அரைக் கட்டணம் வசூலிக்கப்படும்

ஒலிபெருக்கி ஏற்பாடு:—

அசோசியேடட் ரேடியோ ஏஜன்ஸீஸ்,
தெப்பக்குளம், திருச்சி.

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

திருவாளர்,

த. பொ. கை. அழகர்சாமி பிள்ளை, அவர்கள் பி. ஏ.

மறைவு.

செந்தமிழ்ச் செல்வப் பெருந்தகையார் திரு. அழகர்சாமி பிள்ளை அவர்கள் சருவதாரி, தை, ௪ஆம் நாள் (17—1—49) திங்கட்கிழமை இரவு ௫௰ நாழிகை யளவில் உலக வாழ்வை நீத்த செய்தி யறிந்து பெரிதும் துயரடைகின்றோம்.

திரு. பிள்ளை யவர்கள் சென்ற ௩௰௩ ஆண்டுகட்கு மேலாக நம் சங்க உறுப்பினராக விருந்து, பல வகையாலும் சிறந்த தமிழ்த் தொண் டாற்றியவர்கள். தம் அருமை மகன் திரு. கைலாசம் உயர் பதவியி லிருந்து, தொண் டொன்றினில் சேர்ந்த இடையூற்றினுல் உயிர் நீத்ததின் ஈடாகத் தந்த 1250 வெண் பொன்னையும் திக்கற்ற மாண வர்க் கென சங்கத்திற் சேர்த்த பெருங் குணம் பொருந் தியவர்கள். அரசியற் றுறையில் பெரும் பதவியை மா சொன்று மின்றி நேர்மையாகப் பணி யாற்றி ஓய்வு பெற்றுப் பல கூட்டுறவு நிலையங்களிலும், விலங்கு துன்ப நீக்கக் குழு முதலிய பல பொதுப் பணி நிலையங்களிலும் தாம் சாகும் நேரம் வரையிலும் ஆர்வத்தோடு பணி யாற் றியவர்கள். தமிழவேள் அவர்களிடம் மிக்க தொடர்பும் பற்று முடையவர்கள். தமிழவேள் அவர்களும் இவர்க ளிடம் ஒப்பற்ற தனிப் பற்றும், நன் மதிப்பும் கொண்டிருந் தார்கள். தமிழவேள் அவர்கள் நிறுவிய தஞ்சைக் கூட்டுற வுப் பதிப்பகம் வளர்ந் தோங்குவதற்குத் தமிழவேள் அவர்க ளுடன் ஒத்துழைத்துப் பதிப்பக அமைச்சராகவும், பின்னர் தலைவராகவும் இருந்து பதிப்பகத்தை வளம்படுத்தினர்கள்.

தந்நல மற்ற தனிப் பெருஞ் செல்வர். பிறர் நலம் பேணும் பெருந்தகையாளர். நாட்டுச் செட்டுச் சீட்டு (National Savings Certificates) விற்பனையில் அரசியலார் தமக்குக் கொடுத்த தரகுத் தொகைகளை யெல்லாம் சீட்டு வாங்கியவர்கள் வீடு தேடிச் சென்று வீதித்துக் கொடுத்த அருஞ் செயல் இங்குச் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கது. திரு. பிள்ளை யவர்கள் ஒரு சிறந்த தமிழ் வீரர். சென்ற பெரும் போரின் பொழுது திரு. பிள்ளை யவர்கள் ஆண்டு முதிர்ந்தவர்களா யிருந்தும், வான் படைக் காப்பில் சேர்ந்து இள வீரராக விளங்கியது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. இத்தகைய தமிழ் வீரர், தமிழ்த் தொண்டர் மறைவு, தமிழ் நாட்டிற்கும், சிறப்பாக நம் சங்கத்திற்கும் மாற்றொணுப் பெருங் குறையாகும். அவர்கள் பெருங் குணங்களும், அருஞ் செயல்களும் தமிழர்க் கெல்லாம் எடுத்துக் காட்டாகி ஊக்க மளித்துத் தமிழரை யெல்லாம் அவர்தம் நல் வழியில் செலுத்தும்.

திரு. பிள்ளை அவர்கள் நினைவாக நம் சங்க நிலையங்களும், கூட்டுறவுப் பதிப்பகமும், அவர்கள் தொடர்புடைய பிற பல நிலையங்களும் அன்று மூடப்பெற்றன.

நம் பிள்ளை யவர்கள் மக்களுக்கு நம் வருத்தத்தைத் தெரிவித்து ஆறுதல் கூறுகின்றோம்.